Chennai Metropolitan Water Supply & Sewerage Board

# ஆண்டு அறிக்கை
# 2020 – 2021

## பொருளடக்கம்


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | வாரிய இயக்குநர்கள் | 58 |
| 2. | தணிக்கையாளர்களின் அறிக்கை | 59 |
| 3. | இருப்பு நிலைக்குறிப்பு | 75 |
| | வரவு – செலவு கணக்கு | 76 |
| | பணப்புழக்க அறிக்கை | 77 |
| | நிதி ஆதாரம் மற்றும் செயல்முறை அறிக்கை | 79 |
| | அட்டவணைகள் | 80 |
| 4. | கணக்கியல் கொள்கைகள் | 90 |
| 5. | கணக்குகள் மீதான குறிப்புகள் | 93 |
| 6. | தமிழக அரசின் ஆய்வறிக்கை | 105 |
| 7. | நிதிநிலைச் சுருக்கம் – ஐந்தாண்டு ஒரு கண்ணோட்டம் | 117 |

# வாரிய இயக்குநர்கள்
# அறிக்கை காலம் 2020 – 21 (31 மார்ச் 2021 அன்று)

திரு. எஸ்.பி. வேலுமணி. எம்.ஏ., எம்.பில்
அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை,
தலைவர், சென்னைக் குடிநீர் வாரியம்

முழுநேர இயக்குநர்கள்

திரு . டி.என். ஹரிஹரன், இ . ஆ . ப . ,
நிர்வாக இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்

டாக்டர் . டி. பிரபுஷங்கர், இ . ஆ . ப . ,
செயல் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்

திரு. க. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., எம்.எல்.,
எம். எஸ்சி., எம். காம்., எம்.பி.ஏ., பி.ஜி.டி.எல்.ஏ.
பி.ஜி.டி.சி.ஏ.
நிதி இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்

திரு . கே. மதுரைநாயகம். பி . இ.
பொறியியல் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்

அலுவல் வழி இயக்குநர்கள்

திரு. ஹர்மேந்தர் சிங், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை.

திரு . எஸ். கிருஷ்ணன், இ . ஆ . ப . ,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை

திரு .ஜி. பிரகாஷ், இ.ஆ.ப.,
ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி

திரு. சுண்சோங்கம் ஜாதக் சிறு, இ . ஆ . ப . ,
உறுப்பினர் செயலர்,
சென்னை வளர்ச்சிக் குழுமம் மற்றும்
இயக்குநர்.

டாக்டர். சி.என். மகேஷ்வரன், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

Chennai Metropolitan Water Supply & Sewerage Board

# தணிக்கையாளர்களின் தனிப்பட்ட அறிக்கை

**கணேசன் மற்றும் குழுமம்**

பட்டய கணக்காளர்கள்

புதிய எண். 9(பழைய எண்.36),
தெற்கு கடற்கரை அவென்யூ,
எம்.ஆர்.சி. நகர் மெயின் ரோடு,
சென்னை – 600 028.
தொலைபேசி எண்: 044 – 24950547
மின் அஞ்சல் : gandco.ca@gmail.com

## தணிக்கையாளர் அறிக்கை
## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய இயக்குநர்கள் குழுவிற்காக

### நிதி அறிக்கைகள் பற்றிய கூற்றறிக்கை

### கணக்காய்வாளரின் தகவல் நிறைவின்மை கருத்து

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் 31 மார்ச் 2021 வரையிலான இருப்பு நிலைக்குறிப்பு, வரவு செலவு கணக்கு, பணப்புழக்க அறிக்கை, நிதியாண்டுக்கான பொருளாதார மூலம் மற்றும் நிதி பயன்பாடு, இருப்பு நிலை அறிக்கைகளுக்கான இருப்பு நிலைக்குறிப்புகள், குறிப்பிட்ட கணக்கியல் கொள்கைகளின் சுருக்கறிக்கைகள் மற்றும் இதர விளக்கவுரைகள் உள்ளிட்ட தொகுப்பான இருப்பு நிலையறிக்கையை நாங்கள் கணக்காய்வு செய்தோம்.

கீழே தகவல் நிறைவின்மை கருத்துக்கான அடிப்படை எனும் பத்தியின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள விஷயங்களைத் தவிர, எங்களுக்கு கொடுக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கத்தின் படியும் இந்தியாவில் பொதுவாக பின்பற்றப்படும் கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்கவும், வேண்டிய முறையிலும், உண்மை மற்றும் நியாயமான பார்வையிலும் எங்கள் கருத்தில் முன்னால் பத்தியில் குறிப்பிட்டுள்ள அறிக்கைகள் தரும் தகவல்:

(அ) இருப்பு நிலையறிக்கை பொருத்தமட்டில் ஆண்டிற்கான வாரியத்தின் விவகாரங்களின் நிலை, 31 மார்ச் 2021 தேதியில் முடிவடைகிறது.

(ஆ) வரவு செலவு கணக்கு பொருத்தமட்டில், ஆண்டிற்கான பற்றாக்குறை (கூடுதல் வருமானம் மற்றும் செலவுகள்) மேற்க்கூறிய தேதியில் முடிவடைகிறது.

(இ) பணப்புழக்க அறிக்கை பொருத்தமட்டில், ஆண்டிற்கான பணப்புழக்கம் மேற்க்கூறிய தேதியில் முடிவடைகிறது.

(ஈ) பொருளாதார மூலம் மற்றும் நிதி பயன்பாட்டு அறிக்கை பொருத்தமட்டில், ஆண்டிற்கான நிதி பரிவர்த்தனைகள் மேற்க்கூறிய தேதியில் முடிவடைகிறது.

## தகவல் நிறைவின்மை கருத்துக்கான அடிப்படை

i. **பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 1:**
**தெரிவிக்கப்பட வேண்டிய கணக்கியல் கொள்கைகள்**

பிரிவு அறிக்கையிடல் தொடர்பான கணக்கியல் தரநிலை பின்பற்றுதல் பொருட்டு தெரிவிக்கபடவேண்டிய கணக்கியல் கொள்கை (கணக்கியல் தரநிலை எண் 17), குத்தகைகள் (கணக்கியல் தரநிலை எண் 19) மற்றும் சொத்துக்களின் பாதிப்பு (கணக்கியல் தரநிலை எண் 28) இவைகள் குறிப்பிட்ட கணக்கியல் கொள்கைகளின் சுருக்கறிக்கைகளில், வேண்டிய முறையில், தலைப்புக்கு தகுந்த கணக்கியல் தரநிலைகளில் குறிப்பிட்டுள்ளபடி தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ii. **பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 2:**
**கொள்பொருள் மதிப்பீடு.**

மேற்க்கூறப்பட்டுள்ள தரநிலைபடி, கொள்பொருள் மதிப்பீடின் போது குறைவாக பயன்படுத்தப்படும் சரக்குகள்/பயன்படா சரக்குகள்/ பயனற்ற சரக்குகள் அடையாளம் காணப்பட்டு குறிப்பிடப்படவில்லை. உபரி சரக்குகள், சரக்கு குறைப்பாடு, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சரக்குகள், கட்டுப்படுத்தப்பட்ட சரக்குகளின் இருப்புகள் ஈடுசெய்யப்பட்ட சரக்கு கணக்குகளுடன் சமன் செய்யப்படவில்லை மற்றும் மெய் இருப்பு சரிப்பார்ப்பு செய்து இருப்பு பதிவேடுகளுடன் பொருத்தமாக வட்டார அலுவலகங்களில் உள்ள சரக்கு பதிவேடுகள் மற்றும் தகுந்த பொது பேரேடு கணக்குகளில் உள்ள சரக்கு நிலுவைகளுக்கு இடையில் ஏதேனும் வேறுபாடுகள் மற்றும் இருப்புகள் பொருந்தும்படி ஆவணங்கள் ஒப்பிடுதல் செய்யப்படவில்லை. இதன் பாதிப்பு தற்போது மதிப்பீடு செய்ய இயலவில்லை.

iii. **பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 4 :**
**இருப்புநிலைக்குறிப்பு தேதிக்குப் பின் நிகழும் தற்செயல்கள் மற்றும் நிகழ்வுகள்.**

இருப்புநிலைக்குறிப்பு தேதிக்குப்பின் கணக்குகள் மற்றும் அறிக்கையின் மேல் வேண்டிய நடவடிக்கை எடுக்க வாரியம் அங்கீகரிக்கும் தேதி வரையிலான நிகழ்வுகளை கருத்தில் கொள்ளாமை.

### iv. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 5 :
### கணக்கு ஆண்டிற்கான நிகர லாபம் அல்லது இழப்பு, முந்தையக் கால உருப்படிகள் மற்றும் கணக்கியல் மதிப்பீட்டில் மாற்றங்கள்.

நிதிநிலை அறிக்கைகளில் கணக்கிடப்பட்ட முந்தைய கணக்குக்கால பொருட்களை / உருப்படிகளை தரநிலையில் பரிந்துரைக்கப்பட்ட நெறிகளின்படி தெரிவிக்காதது. நிதியாண்டு 2020−21க்கான நிதி அறிக்கையில் வட்டார அலுவலகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுக்கு மீறிய செலவுகள் உட்பட செலவீனங்களுக்கான ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

### v. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 10 :
### சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்.

கணிசமான காலத்திற்கு நிலுவையில் உள்ள சொத்துக்களின் மூலதனமாக்கல் செய்யப்படாதது மற்றும் அதன் மதிப்பிழப்பு வகை செய்யப்படாதது, கணக்கில் பரிவர்த்தனை இல்லாத மற்றும் கணிசமான காலத்திற்கு மூலதனமாக்காமல் நிலுவையிலுள்ள செயல்பாட்டிலுள்ள திட்டங்களுக்கான கணக்குகள் பொருத்தவரை தற்காலிக விகிதத்தில் 5% மதிப்பிழப்பு வழங்கியது, வாரியத்திற்கு சொந்தமான நிலங்கள் பொருத்தமட்டில் குறிப்பிட்ட நிலங்கள் இன்னும் பெயர் மாற்றம் செய்யப்படாதது மற்றும் சொந்தமான நிலங்களுக்கு மூலதனமாக்கபட்ட நிலங்களை ஒப்பிட்டு காணும் போது ஆவணங்கள் ஒப்பாமல் போவது / நில பதிவேட்டிலுள்ள நிலங்களின் மதிப்பு மற்றும் பொது பேரேட்டில் உள்ள நிலங்களின் மதிப்பு ஒப்பிட்டு காணுதல், பயன்பாட்டிலுள்ள நிலங்களின் அல்லது வாரியத்தின் பெயரிலுள்ள நிலங்களின் முழு விவரம் மற்றும் அசையா சொத்துளில் நிலங்களின் மதிப்பை வெளிப்படையாக தெரிவித்தல், தேவைப்பட்டால் பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்ட சொத்துக்களை தெரிவிக்காதது மற்றும் மதிப்பு குறைப்பிற்கு சொத்துகளை மறு ஆய்வு செய்யாததும் சொத்துகளின் மதிப்புக் குறைப்பிற்கு ஏற்பாடு செய்யாததும், பிற நிறுவனங்களால் அல்லது பிற அமைப்புகள் அல்லது பிற அதிகாரிகளால் நடத்தப்படும் வெளிநிதி முதலீட்டில் நடைபெறும் பணிகளுக்கு உரிதான தொகைகளை தெரிவிக்காதது, அசையாச்சொத்துகளின் பதிவேட்டின்படியும் பேரேட்டின்படியும் அசையா சொத்துகள் கணக்கு ஒத்துவராமை, அநேகமாக காலாவதியாகிவிட்ட காரணத்தினால் வறட்சி நிவாரண பணிகள் தலைப்பின் கீழ் வரும் அசையா சொத்துகளை தள்ளுபடி செய்யாதது, மூலதனச் சொத்துகளுக்காக கிடைக்கும் மானியங்களை அவற்றின் மதிப்பிழப்பு தொகையுடன் நிகர் செய்யாதது, சொத்து, ஆலைகள்

மற்றும் உபகரணங்கள் நடப்பு பணிகளுக்கு அங்கீகார அளவுகோல்களின்படி இல்லாமல் பொது நிர்வாகத்தின் விகிதாசாரப் பங்கீடு மற்றும் நிர்வாக மேல்நிலையை ஒரு நிர்ணயிக்கப்பட்ட சதவீதத்தில் பங்கிட்டது.

### Vi. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 9 :
#### வருவாய் அங்கீகாரம்

வரிகள் மற்றும் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதைத் தவிர மற்ற பரிவர்த்தனைகள் தொடர்பான வருவாயைக் கணக்கிடுதல் ரொக்க அடிப்படையில் செய்யப்படுகிறது மற்றும் உறுதிப்படுத்தபட்ட போதுமான ஆதாரத்துடன் முக்கிய தலைப்புகளின்கீழ் அல்லது வருவாய் ஆதாரங்களின் கீழ் கணக்கிடப்பட்ட வருவாய், அங்கீகரிக்கப்பட்ட வருவாயுடன் பொருந்தவில்லை, வருவாய் கணக்கியலுக்கு ஆதாரமாக பயன்படும் அடிப்படை பதிவேடு ஆவணங்களுடன் கணக்கிடப்பட்ட வருவாய் பொருந்தவில்லை, மேலும் கண்டறியப்பட்ட வருவாய்க்கும் வருவாயாண்டுக்கான அடிப்படை பதிவேடுகளுக்கும் வேறுபாடு உள்ளது.

### Vii. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 12 :
#### அரசு மானியங்கள்

மேற்கூறியுள்ள தரநிலை பரிந்துரைக்கும் முறைப்படி மதிப்பிழப்புக்குறிய சொத்துக்களுக்கான அரசு மானியங்களை கணக்கிடவில்லை. "அட்டவணை ஆ" – அரசு மானியங்களின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள வட்டார அலுவலங்களில் காட்டப்படும் வருவாய் தொகை ரூபாய் 117.78 கோடிகள் ஆவணங்களுடன் ஒப்பீடாகவில்லை, இவை கணிசமான காலத்திற்கு நிலுவையில் உள்ளது.

### Viii. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 15 :
#### பணியாளர் நலப்பயன்கள்

தகுதி பகுப்பாய்வு மற்றும் இழப்பு மதிப்பாய்வு அடிப்படையில் பணியாளர் நலப்பயன்கள் சார்ந்த விடுப்பு ஈடுத்தொகை, பணிக்கொடை, ஓய்வூதியம் மற்றும் இதர குடும்ப நல நிதிகளுக்கான ஏற்பாடுகள் பின்பற்றப்படவில்லை.

### ix. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 16 :
### கடன் வாங்கும் செலவுகள்

முதலீடாக்குவதில் உள்ள கணிசமான தாமதத்திற்கு உள்ளாகி இருக்கும் பயன்பாட்டிற்கு தயாராகிக் கொண்டிருக்கும் சொத்துக்களை பொருத்தவரை கடன் வாங்கும் செலவுகள் ஒத்தி வைக்கப்படவில்லை மேலும் இச்சொத்துக்கள் தயாராகிக் கொண்டிருக்கும் காலத்திலும் அது முதலீடாகும் தேதி வரையிலான கணிசமான தாமதத்திலும் இதற்குண்டான வட்டி, பொருள்வாரியாக திட்டத்தின் சொத்துகளுக்கு பகிர்ந்தளிக்க பட்டுள்ளது.

### X. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 17 :
### பிரிவு அறிக்கை

வாரியம் பொறுப்பிலுள்ள நடவடிக்கைகளின் பல்வேறு பகுதிகள் சம்பந்தமான பிரிவு அறிக்கை தொடர்பான தகவல்களை தெரிவிக்காமை.

### Xi. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 19 :
### குத்தகைகள்

வாரியம் எடுத்துக் கொண்ட குத்தகை பரிவர்த்தனை தொடர்பான தகவல்களை தெரிவிக்காமை.

### Xii. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 28 :
### சொத்துகளின் குறைபாடு

வாரியம், இருப்பு நிலை தேதியில் தனது சொத்துகளில் ஏதும் சொத்து குறைபாடு இருக்கிறதா என்று மதிப்பிடவில்லை ஆகையால் எங்களால் சொத்து குறைப்பாடு இருப்பது பற்றி எதுவும் குறிப்பிட இயலவில்லை.

### Xiii. பின்பற்றப்படாத கணக்கியல் தரநிலை 29 :
### விதிமுறைகள், தற்செயல் கட்டுப்பாடுகள் மற்றும் தற்செயலான சொத்துகள்.

திரண்டுள்ள கட்டுப்பாடுகள் பற்றிய விதிகளை/ஏற்பாடுகளை தெரிவிக்காமையும்

அடையாளங்காணாமையும் மற்றும் தற்காலிகமாக வாரியம் பொறுப்புக் கொண்டிருக்கும் அத்தொகை சார்ந்த தற்காலிக கடன்பொறுப்பு தொகைகளை தெரிவிக்காமை.

மேற்கூறிய தரநிலைகளை பின்பற்றாததன் ஒட்டுமொத்த விளைவு மற்றும் மேற்கூறிய தர நிலையை பின்பற்றாததின் பொருளாதார தாக்கத்தை அளவிட கூடிய தேவையான தகவல்கள் தற்போது வாரியத்திடம் இல்லாததால் கீழ் பத்தியில் மற்ற தகுதிகளை அளவிட இயலவில்லை.

மேற்கூறியவற்றைத் தவிர, நிதிநிலை அறிக்கைகளில் பின்வருவனவற்றின் தாக்கத்தை உறுதிப்படுத்த இயலவில்லை:

(அ) " அட்டவணை எ – நடப்பு சொத்துகள், கடன்கள், முன்பணங்கள், வைப்புநிதிகள்" தலைப்பின் கீழ், தலைமை அலுவலகம், வட்டார அலுவலகம் மற்றும் இதர பிரிவுகளுக்கு இடையே உள்ள உட்பிரிவு கணக்குகளின் நிகர பற்றுத் தொகை ரூ. 182.97 கோடிகள் ஆவணங்களுடன் ஒப்பீடாகாதது,

(ஆ) பொது பேரேடு மற்றும் அடிப்படை பதிவேடுகளின்படி இதர பலதரப்பட்ட கடனாளிகள், இதர பலதரப்பட்ட கடனீந்தார், வைப்புநிதி கணக்குகள், கடன்கள் மற்றும் முன்பணங்கள், காப்பு வைப்புநிதிகள்/ தக்கவைப்பு நிதிகள்/ இதர செலுத்த வேண்டிய கணக்குகள், ஊதியம் சம்பந்தமான கணக்கு தலைப்பு ஆவணங்கள் ஒத்துப்போகாதது, பயன்படுத்தாத ரொக்கம், பொறுப்புகளுக்கு மீறிய சொத்துகள், சொத்துகளுக்கு மீறிய பொறுப்புகள் தொடர்பான பொது பேரேட்டின் கணக்கு தலைப்பு ஆவணங்கள் ஒத்துப்போகாதது.

(இ) நடப்பில் இருக்கும் மூலதனநிதி பணிகள் சம்பந்தமான பொது பேரேடு தனிம குறியீடுகளும் மற்றும் அசையா சொத்தின் கீழ் வரும் நடப்பிலுள்ள திட்ட பணிகளின் (வைப்புநிதி பணிகள்) வகைபாடுகளும் அடிப்படை கணக்கேடுகளில் / துணை பேரேடுகளில் பராமரிக்கப்படும் நடப்பு திட்டங்களின் கணக்குகளுடன் ஒத்துப் போகவில்லை, இது பொதுவாக பின்பற்றப்படும் கணக்கியல் கோட்பாடுகளின்படி இல்லாதது.

(ஈ) "அட்டவணை எ – நடப்பு சொத்துகள், கடன்கள், முன்பணங்கள், வைப்புநிதிகள்" தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள 93 வங்கி கணக்குகள் தொடர்பான இருப்பு உறுதிப்படுத்துதல் / வங்கி கணக்கு ஈடு அறிக்கை – 76 வங்கி கணக்குகள் ரூ. 452.22

கோடிகள் மொத்த பற்று இருப்பு, 14 வங்கி கணக்குகள் ரூ. 627.06 கோடிகள் மொத்த கடன் இருப்பு மற்றும் 3 வங்கி கணக்குகள் மொத்த கடன் மற்றும் பற்று சமன் என்பது சரி பார்க்கப்படவில்லை. குறுகியக்கால வைப்பு நிதிகளுடன் மாற்றல் கணக்கு இருப்பு நிகராகவில்லை மற்றும் வங்கியின் பணத்துறையின் நிலையான வைப்புநிதிகளின் இருப்பும் பேரேடுகளும் ஒத்துப்போகாதது.

(உ) கணிசமான காலவரை வரை நிலுவையிலுள்ள வாராக்கடன்களை கண்டுணர்தலுக்கான ஏற்பாடுகள் இல்லாதது.

(ஊ) வருமான மூலங்கள் குறித்த பேரேடுகளின் தலைப்புகள் சார்ந்த இருப்பு மற்றும் வருமானமூலங்களில் பிடிக்கப்படும் வரி குறித்தும் வருமானவரி விதிகளின் கீழ் வரும் படிவம் 29 வஅ (வருடாந்திர அறிக்கை)யும் சமனாக்கப்படாதது.

(எ) தண்ணீரின் அளவு / சுத்தகரிக்கப்படாத தண்ணீர் / சுத்தகரிக்கப்பட்ட தண்ணீர் / என வரும் ஆண்டுகளில் விநியோகத்திற்கென அறியப்பட்ட இன்னபிற பொருட்கள் சம்பந்தமான செலவுகளை அறிதல் மேலும் ஆண்டு இறுதிவரை இவற்றிற்கான செலவுகள் வருமானங்களோடு நிகர் செய்ய ஒத்திவைக்கப்படாதது.

(ஏ) பொருத்தமான நடைமுறை தொகுக்க விளக்கமளிக்கும் விவரங்கள் இல்லாததால் ஆண்டு இறுதியில் செலவினங்களைத் சேர்க்க இயலாதது மேலும் வாரியத்தால் கையாளப்படுகிற ஒப்பந்தங்களின் (வருவாய் மற்றும் மூலதனம்) முழுமையான களஞ்சியம் கிடைக்காதது மற்றும் நிதியாண்டு முடிவுக்கு முன் எடுக்கக்கபட்ட பணிகள் மற்றும் நடவடிக்கைகள் எதற்குண்டான ரசீதுகள் அடுத்த ஆண்டில் பெறப்பட்டதோ அதன் சம்பந்தமாக ஆன செலவீனங்கள் இருப்புநிலை அறிக்கையின் தேதியில் கணக்கிடப்படாதது.

இந்தியப் பட்டயக் கணக்கறிஞர்கள் கழகத்தால் வழங்கப்பட்ட கணக்காய்வு தொடர்பான தரநிலைகளின்படி நாங்கள் எங்கள் கணக்காய்வை நடத்தினோம். அந்த தரநிலைகளின்படி எங்கள் பொறுப்புகள் மேலும் நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் என்னும் பகுதியில் எங்கள் ஆய்வறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. நிதியறிக்கைகளை கணக்காய்வு செய்ய எங்களுக்கு தேவையான நெறிமுறைத் தேவைகளுடன் இந்தியப் பட்டயக் கணக்கறிஞர்கள் கழகத்தால் வழங்கப்பட்ட நெறிமுறைகளின் கோட்பாடுகளின்படி

நாங்கள் வாரியத்தை சார்ந்திருக்கவில்லை. மேலும் நாங்கள் இந்த தேவைகள் மற்றும் நெறிமுறை கோட்பாடுகளுடன் எங்களுடைய பிற நெறிமுறை பொறுப்புகளையும் நிறைவு செய்திருக்கிறோம். எங்களுக்கு கிடைத்த கணக்காய்வு ஆதாரங்கள், தகவல் நிறைவின்மை கருத்துக்கான அடிப்படை தர போதுமானதாகவும் தகுந்ததாகவும் இருந்தது என நாங்கள் நம்புகிறோம்.

### நிதிநிலை அறிக்கைகள் மற்றும் கணக்காய்வாளர்களின் அறிக்கையைத் தவிர இதர தகவல்கள்

இதர தகவல்களை தயாரித்தல் பொறுப்பு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய இயக்குநர்கள் குழுவிற்கானது. இதர தகவல் என்பது நிதிநிலை அறிக்கைகள் மற்றும் எங்கள் கணக்காய்வாளரின் அறிக்கையை ஒதுக்கிவிட்டு, வாரியத்தின் அறிக்கையுடன் சேர்க்கப்பட்ட இணைப்பு உட்பட வாரியத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது. இதர தகவலில் நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எங்கள் கருத்து உள்ளடங்காது மற்றும் நாங்கள் எந்த விதமான உறுதியோ அல்லது முடிவோ அதன்மேல் வழங்கவில்லை.

நிதிநிலை அறிக்கைகளின் எங்கள் கணக்காய்வு தொடர்பாக இதர தகவலைப் படிப்பதும், அவ்வாறு செய்யும்போது, இதர தகவல்கள் நிதிநிலை அறிக்கைகளுக்கு முரண்படுகிறதா, கணக்காய்வின் போது நாங்கள் அறிந்தவை முரணாக உள்ளதா அல்லது பொருள் சம்பந்தமாக தவறாக புரிந்துக் கொள்ளப்பட்டதா என்பதைக் கருத்தில் கொள்வதும் எங்கள் பொறுப்பு.

ஒரு வேளை எங்கள் கணக்காய்வின் அடிப்படையில் இந்த இதர தகவலின் பொருள் தவறாக கூறப்பட்டுள்ளது என நாங்கள் முடிவுக்கு வந்தால் அதை நாங்கள் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. இந்த கணக்காய்வு அறிக்கையின் தேதிக்குப் பிறகு இயக்குநர்கள் குழு அறிக்கை எங்களுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எங்கள் கருத்து இதர தகவலை உள்ளடக்காது, மேலும் எந்த விதமான உறுதியான முடிவையும் நாங்கள் வெளிப்படுத்த மாட்டோம்.

## நிர்வாகத்தின் பொறுப்பு மற்றும் நிதிநிலை அறிக்கைகளுக்கான ஆளுகைக்கு பொறுப்பானவர்கள்

நிதி நிலவரம், நிதி செயல்திறன் மற்றும் கணக்கியல் கொள்கைகளின் தொடர்பான கணக்கியல் தரநிலைகள் உள்ளடக்கிய இந்தியாவில் பொதுவாக பின்பற்றப்படும் கணக்கியல் கொள்கைகளின்படி வாரியத்தின் பணப்பரிவர்த்தனையை உண்மையான மற்றும் நியாயமான நோக்கை தரக்கூடிய நிதியறிக்கைகளை உண்டாக்குதலுக்கும் அதை நியாயமாக தாக்கல் செய்வதற்குமான பொறுப்பு மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய சட்டம் பிரிவு 38(1)ன் கீழ் அவ்வகைப்பட்ட வடிவத்தில் வகுத்துரைக்கப்பட்ட முறையில் நிதி அறிக்கைகள் உண்டாக்குவதும் வாரியத்தின் இயக்குநர் குழுவினுடையது. நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கு தொடர்புடைய சட்டத்தின் விதிகளின்படி போதுமான கணக்கியல் பதிவேடுகளை பராமரித்தல் மற்றும் வாரியத்தின் சொத்துக்களை பாதுகாத்தல் மேலும் மோசடிகள் மற்றும் பிற முறைகேடுகளைத் தடுத்தல் மற்றும் கண்டறிதல்; பொருத்தமான கணக்கியல் கொள்கைகளின் தேர்வு மற்றும் பயன்பாடு; நியாயமான கவனமான முடிவுகளையும் மதிப்பீடுகளையும் செய்தல்; மோசடி அல்லது பிழை காரணமாக உண்டாகும் தவறாக வழிக்காட்டும் கூற்றுகளை தவிர்த்து, உண்மையான மற்றும் நியாயமான நோக்கை அளிக்கும் நிதிநிலை அறிக்கைகளை தயாரித்து வழங்குவது தொடர்பான கணக்கியல் பதிவேடுகளின் துல்லியம் மற்றும் முழுமையை உறுதி செய்வதற்காக திறம்பட செயல்படும் போதுமான உள்நிதிக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல், செயல்படுத்தல் மற்றும் பராமரித்தல் இப்பொறுப்பில் உள்ளடங்கியது.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் இயக்குநர்கள் குழுவின் பொறுப்பு, ஒரு இயக்க நிறுவனமாகத் தொடர்வதற்கான வாரியத்தின் திறனை மதிப்பிடுவது, தேவையானபடி வாரியத்தை பாதிக்கும் நேர்மறை மற்றும் எதிர்மறை செய்திகள், தரவு மற்றும் செயல்பாட்டு விவரங்களை வெளிப்படுத்துவது, இயக்குநர் குழு வாரியத்தை கலைக்க முற்படாத வரையோ

அல்லது செயல்பாடுகளை நிறுத்தாத வரையோ அல்லது கணக்கு அடிப்படைகளை தொடர்வதை நிறுத்த சரியான காரணம் இல்லாதவரையோ இயங்கும் வாரியத்தின் கணக்கு அடிப்படைகளை தொடர்வது ஆகும்.

குழுவின் மூலோபாய திசை மற்றும் குழுவின் பொறுப்புக்கூறல் தொடர்பான கடமைகளை மேற்பார்வையிடுவதற்கு இயக்குநர்கள் குழு பொறுப்பாகும். உதாரணம்., வாரியத்தின் நிதி அறிக்கை செயல்முறையை மேற்பார்வையிடுவது இயக்குநர்கள் குழு பொறுப்பு.

## நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது பிழை காரணமாக நிதிநிலை அறிக்கைகள் ஒட்டுமொத்தமாக தவறாக வழிக்காட்டும் கூற்று இல்லாமல் இருக்கிறது என்பதைப் பற்றிய உறுதியை பெறுவதும், எங்கள் கருத்தை உள்ளடக்கிய தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எங்கள் நோக்கங்களாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் கணக்காய்வு தொடர்பான தரநிலைகளின்படி நடத்தப்படும் கணக்காய்வானது, ஒரு தவறான வழிக்காட்டும் கூற்று இருக்கும் போது அதை எப்போதும் கண்டறியும் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. தவறான வழிக்காட்டும் கூற்றுகள் மோசடி, பிழை அல்லது அது போன்ற கருதப்படும் எந்த மூலத்திலிருந்தும் தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ துவங்கலாம். பயனாளரால் இவ்வாறான அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்படும் எந்த பொருளாதார முடிவுகளையும் இது கணிசமாக பாதிக்கும்.

கணக்காய்வுக்கான தரநிலைகள்படி கணக்காய்வின் அங்கமாக கணக்காய்வு முழுதும் நாங்கள் தொழில்முறை மதிப்பீட்டை கையாளுகிறோம் மற்றும் தொழில்முறை ஐயுறவை தொடர்கிறோம்.

மேலும் நாங்கள் :

- மோசடி அல்லது பிழை காரணமாக நிதிநிலை அறிக்கையிலுள்ள தவறாக வழிக்காட்டும் கூற்றுகளால் ஏற்படும் ஆபாயங்களை கண்டறிந்து மதிப்பிடுகிறோம், அந்த அபாயங்களுக்கு ஏற்ற வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துகிறோம் மற்றும் எங்கள் கருத்தை வழங்க போதுமான மற்றும் தகுந்த ஆதரங்களை திரட்டுகிறோம். பிழையால் ஏற்படும் தவறாக வழிநடத்தும் கூற்றை கண்டறியாததில் உள்ள அபாயத்தை விட மோசடியின் விளைவாக ஏற்படும் தவறாக வழிநடத்தும் கூற்றை கண்டறியாததில் உள்ள அபாயம் கூடுதல், ஏனெனில் மோசடி என்பது கூட்டு, மோசடிப்புனைவு, வேண்டுமென்றே புறக்கணித்தல், தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல் அல்லது உள் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கலாம்.
- சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்க, கணக்காய்வு தொடர்பான உள் கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறுகிறோம்.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் சரியான தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிர்வாகத்தால் செய்யப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் தொடர்புடைய வெளிக்கொணர்வுகளை மதிப்பீடு செய்கிறோம்.
- நிர்வாகம் கடைப்பிடிக்கும் இயங்கும் நிறுவன அடிப்படியிலான கணக்கியலின் பொருத்தத்தன்மையையும் மேலும் கிடைக்கப்பெற்ற கணக்காய்வு ஆதரங்கள் அடிப்படையில் வாரியத்தின் இயங்கும் நிறுவனத்தின் இயக்கத்தை பாதிக்கும் குறிப்பிட்ட ஐயங்களை எழுப்பக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான நிலைபாதிப்பு கூற்று உள்ளதா எனவும் முடிவுசெய்கிறோம். நிலைபாதிப்பு கூற்று உள்ளது என நாங்கள் முடிவுக்கு வந்தால், நிதிநிலை அறிக்கைகளிலுள்ள

அத்தொடர்பான வெளிக்கொணர்வுகளை அல்லது அத்தகைய வெளிக்கொணர்வுகள் எங்கள் கருத்தை மாற்ற போதுமானதாக இல்லை என்பதை எங்கள் கணக்காய்வு அறிக்கையின் மூலம் கவன ஈர்ப்பு செய்கிறோம். எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையின் தேதி வரை பெறப்பட்ட தணிக்கை சான்றுகளின் அடிப்படையில் எங்கள் முடிவுகள் உள்ளன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது படிநிலைகள் வாரியம் ஒரு இயங்கும் நிறுவனமாக தொடர்வதை நிறுத்தக்கூடும்.

- வெளிக்கொணர்வுகள் உட்பட நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த தாக்கல், கட்டமைப்பு மற்றும் உட்பொருளை மதிப்பீடு செய்தல் மற்றும் மற்றும் நியாயமான முன்னிலைப்படுத்துதலை அடையும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகளை நிதிநிலை அறிக்கை எடுத்துரைக்கிறதா என்பதையும் பார்க்கிறோம்.

வாரியத்தின் நிர்வாக பொறுப்பிலுள்ளவர்களுடன் குறிப்பாக குறிப்பிடப்படாத விஷயங்களுக்கு கூடுதலாக கணக்காய்வின் திட்டமிடப்பட்ட நோக்கம் மற்றும் காலம் மேலும் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட குறிப்பிட்ட குறைபாடுகள் ஏதும் இருப்பின் அதுவும் உள்ளடங்கிய குறிப்பிட்ட கணக்காய்வின் கண்டறிந்த முடிவுகளை தெரிவிக்கிறோம், மற்றும் வாரியத்தின் நிர்வாக பொறுப்பிலுள்ளவர்களுக்கு சார்பின்மை தொடர்பாக தகுந்த தார்மீக தேவைகளுடன் நாங்கள் தொகுத்த அறிக்கையை வழங்குகிறோம், மேலும் எங்களுடைய சார்பின்மையை தக்கவைத்துக்கொள்ளகூடிய தொடர்புகள் மற்றும் பிற விஷயங்களை மற்றும் தேவையான தருணங்களில் என்று நியாயமாக கருதிய அனைத்தையும் கணக்காய்வாளருக்கு தொடர்பின் பரிச்சயத்தால் ஏற்படும் இடையூறுக்களுக்கு எதிரான பாதுகாப்புகளுடன் அவர்களிடம் தெரிவிக்கிறோம்.

## பிறத் தகவல்கள்

- வாரிய இயக்கத்தின் அளவு மற்றும் தன்மைக்கு ஏற்ப உள்கணக்காய்வு முறைமையை பலப்படுத்த வேண்டும்.

- நிதிநிலையறிக்கையின் தயாரிப்பிலும் தாக்கலிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உட்கட்டுபாட்டில் குறிப்பிட்ட குறைப்பாடுகள் மற்றும் பலவீனத்தில் முடியும் வடிவமைப்பு குறைபாடுகள் / கட்டுபாடுகளின் வடிவமைப்பு மற்றும் இயக்கம் கண்டறியப்பட்டுள்ளது மற்றும் கணக்கியல் கையேடு/கணக்கியல் சார்ந்த விஷயங்களில் புரிந்துக் கொள்ளும் நடைமுறை இல்லை, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் வழக்கத்தை பின்பற்றுதலுக்குறிய போதிய திறனும் பயிர்ச்சியும் இல்லாதது உட்பட போதிய வடிவமைப்பு மற்றும் கட்டுபாடு செயல்முறைப்படுத்துதலும் வடிவமைப்பும் நிர்வாகத்திற்கு காலவரை அடிப்படையில் குறைபாடுகளை தெரிவிக்கக் கூடிய உள்செயல்முறையும் இல்லை.

- சமசீரற்ற தகவலை தவிர்க்க கணக்காய்வுக்குள்ளாகும் நிதிநிலை அறிக்கைகளை தயாரிக்கும் உட்கட்டுப்பாட்டு வடிவமைப்பு பலப்படுத்தப்பட வேண்டும் மற்றும் காலத்தாமதம், துல்லியமற்ற மற்றும் முழுமையில்லா தகவல்கள் போன்ற குறைப்பாடுகளை தவிர்க்க முழுமையான மற்றும் துல்லியமான வெளியீடுகளை வழங்க உட்கட்டுபாட்டின் தகவல் தரும் கூறுகள் சரியான நேரத்தில் கண்டறியப்பட வேண்டும் மேலும் பொறுப்புகள் மற்றும் சொத்துகள் கணக்கு வைக்கப்பட வேண்டும்.

- நிர்வாகத்தின் உட்கட்டுபாட்டில் உள்ள, குறிப்பாக நிலம், முடிந்த வேலைகள், கடன் வாங்க செலவான தொகையை முதலீடாக்குதல், திரண்ட செலவு, பொது பேரேட்டின் கணக்குகளை காலாந்திர அடிப்படையில் சரிப்பார்த்தல் போன்ற அசையா சொத்துகளை முதலீடாக்கும் குறைகளை கால அடிப்படியில் தெரிவிக்கும் வழக்கு குறைப்பாடு, நிதிநிலை அறிக்கைகளை கடந்தக்கால கணக்குகளுடன் சரிக்கட்ட காரணமாகிறது.

- போதுமான வடிவமைப்பு/கட்டுபாடுகளை வடிவமைத்து செயல்படுத்துதல் இல்லாதது, பிற துணைப்பிரிவுகளிலிருந்து சில பரிவர்த்தனைகளின் கணக்கு வைப்பதை

தனிமைப்படுத்தும் பொருளாதார அலகுகளின் உட்கட்டுப்பாடு அடையாளங்காண இயலாத தவறாக வழிக்காட்டும் தகவல்களுக்கு காரணமாகிறது மற்றும் மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளை உள்ளடக்குவது தகவல்களை மாற்றி திருத்துவதற்கும் நிதிநிலை அறிக்கையை மாற்றி சரியமைப்பதற்கும் காரணமாகிறது.

- இதர பிரிவுகளில் வட்டார அலுவகங்களில் தொகுக்கப்பட்ட கணக்கியலுக்கான விரிவான நடைமுறைகள் மற்றும் கணக்கியலுக்கான கையேடு இல்லை இதன் விளைவாக, வட்டார அலுவலகங்கள்/வாரியத்தின் இதர மண்டலங்களில் முழுவதும் ஒரே மாதிரியான கணக்குகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

- சில பணியாளர்களுக்கு தங்கள் பணியை நிறைவுற செய்வதற்கான பயிர்ச்சியின்மை யால் உட்கட்டுபாடு நிறுவுவதில் குறைபாடு உள்ளது.

- பொறுத்தமான கொள்கைகளை தேர்ந்து கடைப்பிடித்தல் மற்றும் கட்டாய கணக்கியல் தரநிலைகள் அல்லது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க செயல்படுத்துதலை உறுதிச் செய்ய கட்டுப்பாடு மற்றும் நடைமுறைகளை அமுல்ப்படுத்தாதது, நிதிநிலை அறிக்கைகளில் தகவல் தவிர்ப்பு தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் வாரியத்தின் நிதி அறிக்கையிடல் மற்றும் உட்கட்டுப்பாட்டில் நிர்வாகத்தின் பொறுப்புள்ளவர்களின் கவனக் குறைவான மேற்நோக்கைக் காட்டுகிறது.

- விவகார நிலைகள் மற்றும் வாரியத்தின் இறுதிமுடிவுகளில் கணக்கியல் தரநிலைகளை அல்லது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் பின்பற்றப்படாததின் தனிப்பட்ட அல்லது ஒன்றிணைந்த தாக்கத்தை அளவிட செயற்பாடு இல்லை.

## பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை.

**நாங்கள் தெரிவிப்பது :**

1. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சட்டப்பிரிவு 39(4) கீழ் எங்கள் தணிக்கையின் நோக்கத்திற்கு தேவையான எங்கள் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் சிறந்த அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நாங்கள் தேடிப் பெற்றுள்ளோம் மற்றும் அவை தேவைக்கு திருப்தியாக இருப்பது கண்டறியப்பட்டது.

2. கணக்கியல் பதிவுகளில் மேலே தகவல் நிறைவின்மை கருத்துக்கான அடிப்படை எனும் பத்தியில் விவரிக்கப்பட்ட அந்த விவகாரங்கள் தவிர இதுவரை வாரியத்தின் கணக்கு ஏடுகளை நாங்கள் ஆய்வு செய்ததில் எங்கள் பார்வையில் தேவையான கணக்கு பதிவுகளை வாரியம் வைத்துள்ளது.

3. இருப்பு நிலைக்குறிப்பு, வரவு செலவு கணக்கு, பணப்புழக்க விவர அறிக்கை மேலும் நிதிமூல அறிக்கை மற்றும் நிதிகளின் பயன்பாடுகளை கையாண்டிருக்கும் இவ்வறிக்கையை (எந்த வடிவம் மற்றும் முறையில் நிதிநிலை அறிக்கையை உண்டாக்க வேண்டுமென வழிக்காட்டுதலை வாரியத்தின் சட்டப்பிரிவு 38(1)ல் இன்னும் குறிப்பிடப்படவில்லை எனும் காரணத்தினால்) வாரியம் கடைப்பிடித்து வரும் இதுவரை தொடரும் வழக்கத்தின் வடிவம் மற்றும் முறையிலும் மற்றும் இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் வழங்கிய பொருத்தமான கணக்கியல் தரநிலைகள் வழிக்காடும் முறையில் உண்டாக்கி இருக்கிறோம், மேலும் மேலே தகவல் நிறைவின்மை கருத்துக்கான அடிப்படை எனும் பத்தியில் விவரிக்கப்பட்ட அந்த விவகாரங்கள் தவிர இவ்வறிக்கை வாரியத்தின் ஏடுகளோடு பொருந்துகிறது.

4. மேலும் மேலே தகவல் நிறைவின்மை கருத்துக்கான அடிப்படை எனும் பத்தியில் விவரிக்கப்பட்ட அந்த விவகாரங்கள் தவிர எங்கள் கருத்துப்படி, மேற்கூறிய நிதிநிலை அறிக்கைகள், இந்தியப் பட்டயக் கணக்காளர்களின் நிறுவனம் வழங்கிய பொதுவாக இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்படுகிற கணக்கியல் தரநிலைகளுடன் இணங்குகிறது.

5. நிதிமூல அறிக்கை மற்றும் நிதிகளின் பயன்பாடுகள் மற்றும் பணப்புழக்க அறிக்கைகளுக்கான நடப்பு ஆண்டு புள்ளி விவரங்களுடன் தொடர்புடைய முந்தைய ஆண்டு புள்ளி விவரங்கள் வெளியிடப்படவில்லை.

6. நிலையான சொத்துகளைப் புதுப்பித்தல் நிதி முதலீட்டின் பயன்பாடு, இது உருவாக்கப்பட்ட நோக்கத்திற்கு ஏற்ப அல்ல, மேலும் அதைப் பயன்படுத்துவது சட்டத்தின் பிரிவு 31(5) இன் கீழ் அரசாங்கத்தின் ஒப்புதல் இல்லாமல் உள்ளது.

7. இயக்குநர்கள் குழுவின் கட்டமைப்பு, சட்டபிரிவு 4 (e) இன் படி இல்லை.

.

கணேசன் மற்றும் கூட்டு நிறுவனம்
பட்டயக் கணக்கறிஞர்கள்
நிறுவன பதிவு எண் : 000859S

– ஒப்பம்–
என். வெங்கட்ரமணி
பங்காளர்

இடம்: சென்னை
தேதி: 23.02.23

உறுப்பினர் எண்: 215145
தனிப்பட்ட ஆவண அடையாள எண்: 23215145BGSJFT2236

## 2021-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிய இருப்பு நிலைக்குறிப்பு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2020-21 (ரூபாய்) | 2019-20 (ரூபாய்) |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | - | | |
| பங்களிப்பு | அ | 22,15,10,81,902.89 | 20,51,30,18,382.31 |
| அரசுமானியம் | ஆ | 66,21,80,56,823.53 | 56,66,75,09,232.53 |
| நீண்டகாலக் கடன்கள் | இ | 19,19,87,94,784.00 | 19,12,98,92,373.00 |
| நிறுத்திவைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும் | ஈ | 15,88,64,03,757.16 | 14,80,80,23,025.04 |
| நடப்பு பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | உ | 10,49,54,37,552.41 | 8,42,44,75,203.63 |
| மொத்தம் | | **1,33,94,97,74,819.99** | 1,19,54,29,18,216.51 |
| **சொத்துக்கள்** | - | - | - |
| நிலையான சொத்துக்கள் | ஊ | 90,56,71,08,038.86 | 83,02,99,32,032.73 |
| நடப்பு சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை | எ | 23,34,49,58,541.65 | 17,73,55,86,513.86 |
| சேர்ந்துள்ள பற்றாக்குறை | | 20,03,77,08,239.48 | 18,77,73,99,669.92 |
| மொத்தம் | | **1,33,94,97,74,819.99** | **1,19,54,29,18,216.51** |

இதே தேதியிட்ட எங்கள் அறிக்கையின் படி
கணேசன் மற்றும் குழுமத்திற்க்காக
பட்டய கணக்காளர்கள்
நிறுவன பதிவு எண்: 000859S

சென்னை குடிநீர் வாரியத்திற்காக

– ஒப்பம்–
என். சித்ரா
நிதி இயக்குனர்

– ஒப்பம்–
ஆர். கிர்லோஷ்குமார், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குனர்

– ஒப்பம்–
என்.வெங்கட்ரமணி
பங்காளர்
உ. எண்: 215145

இடம்: சென்னை
தேதி: 23.02.23

## 2021-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிந்த ஆண்டின் வரவு – செலவு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2020–21 (ரூபாய்) | 2019 – 20 (ரூபாய்) |
|---|---|---|---|
| **வரவினங்கள்** | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | ஏ | 4,81,31,72,576.43 | 4,50,32,73,021.67 |
| குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி | ஐ | 2,32,16,99,155.00 | 2,13,64,96,400.00 |
| அரசு மானியம் | | 3,99,31,85,125.00 | 2,74,18,74,891.00 |
| இதர வருமானம் | ஒ | 79,51,15,137.75 | 1,23,84,00,683.32 |
| முந்தைய கால சரிகட்டல் கணக்கு | ஓ | 0.00 | 0.00 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | | | |
| – குடிநீர் கட்டணம் அளவுமானி பொருத்தப்பட்டது | | 89,78,779.40 | 21,52,118.70 |
| –குடிநீர் கட்டணம் அளவுமானி பொருத்தப்படாதது | | 0.00 | 0.00 |
| – வரிகள் | | 0.00 | 15,52,94,959.76 |
| வரவை விட செலவு அதிகம் | | 1,26,03,08,569.56 | 3,34,40,58,612.04 |
| மொத்தம் | | 13,19,24,59,343.14 | 14,12,15,50,686.49 |
| **செலவினங்கள்** | | | |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | ஔ | 6,62,73,31,216.93 | 6,66,75,69,404.27 |
| பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள் | அஅ | 2,50,57,57,676.44 | 2,63,60,87,333.33 |
| அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | அஆ | 8,20,59,182.50 | 9,64,69,775.38 |
| குடிநீர் ஊர்தி வாடகைக் கட்டணங்கள் / வறட்சி நிவாரண செலவுகள் | | 88,33,00,788.00 | 1,62,66,91,531.30 |
| தேய்மானம் | | 1,30,01,41,929.81 | 1,39,02,71,652.32 |
| கடன் பணிச் செலவுகள் | | 83,65,11,777.50 | 91,38,87,359.83 |
| முந்தைய கால சரிகட்டல் கணக்கு | அஇ | 81,26,81,278.13 | 75,04,99,791.95 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | அஈ | | |
| – குடிநீர் கட்டணம் அளவுமானி பொருத்தப்பட்டது | | 0.00 | 0.00 |
| –குடிநீர் கட்டணம் அளவுமானி பொருத்தப்படாதது | | 2,20,57,191.36 | 4,00,73,838.11 |
| – வரிகள் | | 12,26,18,302.47 | 0.00 |
| மொத்தம் | | 13,19,24,59,343.14 | 14,12,15,50,686.49 |

இதே தேதியிட்ட எங்கள் அறிக்கையின் படி
கணேசன் மற்றும் குழுமத்திற்க்காக
பட்டய கணக்காளர்கள்
நிறுவன பதிவு எண்: 000859S

சென்னை குடிநீர் வாரியத்திற்காக

– ஒப்பம்–
என். சித்ரா
நிதி இயக்குனர்

– ஒப்பம்–
ஆர். கிர்லோஷ்குமார், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குனர்

– ஒப்பம்–
என்.வெங்கட்ரமணி
பங்காளர்
உ. எண்: 215145

## மார்ச் 31, 2021 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணப்புழக்க அறிக்கை

| விவரங்கள் | 2020-21 | |
|---|---|---|
| | ரூபாய் | ரூபாய் |
| **அ. செயல்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து பணப்புழக்கம்** | | |
| வரிவிதிப்புக்கு முன் நிகர லாபம்/ (நட்டம்), மற்றும் அசாதாரண பொருள் | | (1,26,03,08,569.56) |
| **சரிசெய்தல்** | | |
| தேய்மானம் | 1,30,01,41,929.81 | |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்கான ஒதுக்கீடு வட்டி | 13,56,96,714.43 | |
| வட்டி செலவுகள் | 83,65,11,777.50 | |
| வட்டி வருமானம் | (53,26,08,952.33) | |
| | | 1,73,97,41,469.41 |
| **செயல்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன் செயல்பாட்டு லாபம் – (1)** | | 47,94,32,899.85 |
| **செயல்பாட்டு மூலதனத்தில் மாற்றங்கள்** | | |
| சரக்குகளில் குறைவு /(அதிகரிப்பு) | (12,04,09,453.42) | |
| வர்த்தக வரவுகளில் குறைவு /(அதிகரிப்பு) | (1,72,79,63,432.37) | |
| குறுகிய கால கடன்கள் மற்றும் முன்பணங்களில் குறைவு /(அதிகரிப்பு) | (89,19,62,504.00) | |
| வர்த்தகத்திற்கு செலுத்த வேண்டிய தொகையில் அதிகரிப்பு/(குறைவு) | 90,59,39,246.18 | |
| தற்போதைய பொறுப்புகளில் அதிகரிப்பு/ (குறைவு) – மற்றவை | 42,87,80,156.60 | |
| ஒத்திவைக்கப்பட்ட கடன்கள் மற்றும் வைப்புகளில் அதிகரிப்பு | 1,07,83,80,732.12 | |
| **செயல்பாட்டுமூலதனத்தில் நிகர மாற்றங்கள்–(2)** | | (32,72,35,254.89) |
| **செலுத்தப்பட்ட வருமானவரி (நிகர திரும்பப்பெறுதல் ) – (3)** | | 74,62,534.00 |
| **இயக்க நடவடிக்கைகளில் இருந்து பெறப்படும் நிகர பணம் [(1)+(2)+(3)]** | | 15,96,60,178.96 |
| **ஆ. முதலீட்டு நடவடிக்கைகளில் பணப்புழக்கம்** | | |
| CWIP யும் சேர்த்து நிலையான சொத்துக்களை வாங்குதல் | (8,83,73,17,935.94) | |

| | | |
|---|---|---|
| வைப்புத்தொகை மற்றும் முதலீடுகளில் குறைவு | 50,76,87,506.41 | |
| பெறப்பட்ட வட்டி | 18,08,81,696.33 | |
| **முதலீட்டு நடவடிக்கையில் பெறப்பட்ட நிகர பணம்** | | **(8,14,87,48,733.20)** |
| இ. நிதி நடவடிக்கையில் பணப்புழக்கம் | | |
| செலுத்தப்பட்ட வட்டி | (10,02,68,832.00) | |
| நிதி நிறுவனங்களில் நீண்ட கால கடன் அதிகரிப்பு | 30,00,00,000.00 | |
| நிதி நிறுவனங்களுக்கு திருப்பிச் செலுத்திய கடன் | (23,10,97,589.00) | |
| தமிழக / இந்திய அரசின் மானியம் அதிகரிப்பு | 9,55,05,47,591.00 | |
| அரசு/பொதுமக்களின் பங்களிப்பு அதிகரிப்பு | 1,63,80,63,521.08 | |
| **நிதி நடவடிக்கையில் பயன்படுத்திய நிகர பணம்** | | **11,15,72,44,691.08** |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகளின் நிகர அதிகரிப்பு/ (குறைவு) | | 3,16,81,56,136.84 |
| ஆண்டின் தொடக்கத்தில் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் | | 7,40,61,95,715.63 |
| ஆண்டின் இறுதியில் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் | | 10,57,43,51,852.47 |
| **பணம் மற்றும் பணச் சமமானவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன** | | |
| கையிருப்பு | | 4,05,516.35 |
| வங்கியிருப்பு – நடப்பு கணக்கில் | | 4,55,61,24,293.59 |
| வங்கியிருப்பு– குறுகிய கால வைப்புத்தொகை | | 6,01,78,22,042.53 |
| இருப்புநிலைக் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்ட பணம் மற்றும் பணச் சமமானவை | | **10,57,43,51,852.47** |

இதே தேதியிட்ட எங்கள் அறிக்கையின் படி
கணேசன் மற்றும் குழுமத்திற்க்காக
பட்டய கணக்காளர்கள்
நிறுவன பதிவு எண்: 000859S

சென்னை குடிநீர் வாரியத்திற்காக

– ஒப்பம்–
**என். சித்ரா**
நிதி இயக்குனர்

– ஒப்பம்–
**ஆர். கிர்லோஷ்குமார், இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குனர்

– ஒப்பம்–
**என்.வெங்கட்ரமணி**
பங்காளர்
உ. எண்: 215145

## 2020-21 ஆம் நிதியாண்டுக்கான நிதி ஆதாரம் மற்றும் செயல்முறை அறிக்கை

| **அ. ஆதாரங்கள்:** | 2020 – 21 (ரூபாய்) |
|---|---|
| உள் உருவாக்கப்பட்ட நிதி (தேய்மானம், வட்டி மற்றும் ஐயப்பாடுள்ள கடன்களுக்கு முன் உள்ள நிகர உபரித்தொகை) | 1,01,17,13,469.18 |
| பங்களிப்புகள் | 1,63,80,63,520.58 |
| அரசிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் | 9,55,05,47,591.00 |
| நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நீண்ட கால கடன்கள் | 30,00,00,000.00 |
| வைப்புத்தொகைகள் மற்றும் முதலீடுகள் | 15,62,88,633.41 |
| திரும்பப்பெறப்பட்ட வருமானவரி | 1,01,17,680.00 |
| **மொத்த ஆதாரங்கள்** | 12,66,67,30,894.17 |
| **ஆ. செயல்முறைகள் :** | |
| நிலையான சொத்துக்களின் மீதான முதலீடுகள் | 8,83,73,17,935.94 |
| நிதி நிறுவனங்களுக்கு திருப்பிச் செலுத்திய கடன்கள் | 23,10,97,589.00 |
| செலுத்தப்பட்ட வட்டி | 10,02,68,831.50 |
| செலுத்தப்பட்ட வருமானவரி | 26,55,146.00 |
| அதிகரிக்கப்பட்ட செயல்பாட்டு மூலதனம் | 3,49,53,91,391.73 |
| **மொத்த செயல்முறைகள்** | 12,66,67,30,894.17 |

இதே தேதியிட்ட எங்கள் அறிக்கையின் படி
கணேசன் மற்றும் குழுமத்திற்க்காக
பட்டய கணக்காளர்கள்
நிறுவன பதிவு எண்: 000859S

சென்னை குடிநீர் வாரியத்திற்காக

– ஒப்பம்–
**என். சித்ரா**
நிதி இயக்குனர்

– ஒப்பம்–
**ஆர். கிர்லோஷ்குமார், இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குனர்

– ஒப்பம்–
**என்.வெங்கட்ரமணி**
பங்காளர்
உ. எண்: 215145

இடம்: சென்னை
தேதி: 23.02.23

# அட்டவணைகள்

## அட்டவணை – அ - பங்குகள்

| விவரங்கள் | 2020-21 (ரூபாய்) | 2019-20 (ரூபாய்) |
|---|---|---|
| அரசிடமிருந்து பங்குகள் | 4,87,96,58,365.32 | 4,87,96,58,365.32 |
| பொதுமக்களிடமிருந்து பங்குகள் | 9,21,43,31,891.02 | 8,75,40,60,436.02 |
| சென்னை மாநகராட்சியிடமிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 15,91,67,365.25 | 15,91,67,365.25 |
| பொதுப்பணித்துறையிலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 5,18,87,380.46 | 5,18,87,380.46 |
| தற்காலிக வாரியத்திலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 8,42,251.86 | 8,42,251.86 |
| உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்களை விட அதிக பொறுப்புகள் | -43,69,42,738.80 | -43,69,42,738.80 |
| மூலதன ஒதுக்கீடு | 7,17,65,69,884.78 | 5,99,87,77,819.20 |
| நிலையான சொத்துக்களை புதுப்பித்தல் நிதி | 1,10,55,67,503.00 | 1,10,55,67,503.00 |
| மொத்தம் | 22,15,10,81,902.89 | 20,51,30,18,382.31 |

## அட்டவணை – ஆ - அரசு மானியம்

| விவரங்கள் | 2020-21 (ரூபாய்) | 2019-20 (ரூபாய்) |
|---|---|---|
| இரண்டாவது சென்னை குடிநீர்த் திட்டம் | 1,37,37,90,001.00 | 1,37,37,90,000.53 |
| சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம் | 3,51,59,00,000.00 | 351,59,00,000.00 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் | 7,74,73,77,085.00 | 5,96,15,27,085.00 |
| நெம்மேலியிலுல்ல கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் | 10,94,96,74,351.00 | 8,93,22,04,351.00 |
| இதர வகைகள் | 15,36,39,90,257.53 | 13,99,42,64,487.00 |
| தேர்வாய்கண்டிகையிலிருந்து பூண்டி வரை | 70,62,00,000.00 | 66,05,00,000.00 |
| சீர்மிகு நகரம் | 61,26,50,620.00 | 10,25,81,362.00 |
| 400 ந.ஒ.ப.ல.லி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் | 14,31,79,400.00 | 1,56,67,500.00 |
| தூய்மை இந்தியா திட்டம் | 21,19,25,000.00 | 14,71,50,000.00 |
| சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை, | 75,59,45,630.00 | 38,87,25,760.00 |
| சென்னை பெருநகர் வளர்ச்சி தூதுக்குழு திட்டம் | 10,52,35,01,178.00 | 8,36,99,01,178.00 |
| 45 ந.ஒ.ப.ல.லி – மூ.நி.த.ச.ப | 5,10,48,00,000.00 | 4,69,98,00,000.00 |
| உள்ளாட்சி மானியங்கள் | 1,90,34,07,692.00 | 1,90,34,07,692.00 |
| பொறுப்புரிமை மாற்றம் நிதி | 7,30,57,15,609.00 | 6,60,20,89,817.00 |
| மொத்தம் | 66,21,80,56,823.53 | 56,66,75,09,232.53 |

## அட்டவணை - இ - நீண்ட கால கடன்கள்

| விவரங்கள் | 2020-21 (ரூபாய்) | 2019-20 (ரூபாய்) |
|---|---|---|
| அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் | 15,22,15,86,540.00 | 15,22,15,86,540.00 |
| நிதிநிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் | 3,97,72,08,244.00 | 3,90,83,05,833.00 |
| மொத்தம் | 19,19,87,94,784.00 | 19,12,98,92,373.00 |

## அட்டவணை - ஈ - நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும்

| விவரங்கள் | 2020-21 (ரூபாய்) | 2019-20 (ரூபாய்) |
|---|---|---|
| (I) பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகை: | | |
| - இணைப்புப் பணிகளுக்கு - கழிவுநீர் | 91,47,03,005.12 | 46,03,14,639.00 |
| - பொதுப்பணிகளுக்கு | 13,47,74,55,481.21 | 12,96,37,31,535.21 |
| - சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 19,61,16,331.00 | 15,83,56,999.00 |
| (II) பிணை வைப்புத் தொகைகள் மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட பணம் : | | |
| அ. நிறுத்திவைக்கப்பட்ட பணம் : | | |
| - பொருட்கள் வழங்குபவர்கள் | 5,50,22,403.00 | 4,27,26,964.00 |
| - ஒப்பந்தக்காரர்கள் | 1,11,18,57,011.43 | 1,05,30,76,362.43 |
| ஆ. பிணை வைப்புத் தொகைகள் | | |
| - பணியாளர்கள் | 66,597.40 | 66,597.40 |
| - நுகர்வோர்கள் | 5,04,88,626.00 | 5,04,88,626.00 |
| - ஒப்பந்தக்காரர்கள் | 8,06,62,372.00 | 7,92,29,372.00 |
| - இதர வகைகள் | 31,930.00 | 31,930.00 |
| மொத்தம் | 15,88,64,03,757.16 | 14,80,80,23,025.04 |

## அட்டவணை - உ - நடப்பு பொறுப்புகள்

| விவரங்கள் | 2020-21 (ரூபாய்) | 2020-21 (ரூபாய்) |
|---|---|---|
| (அ) கடனீந்தோர் | | |
| - பொருட்கள் வழங்குபவர்கள் | 21,41,13,093.65 | 9,66,93,754.56 |
| - ஒப்பந்தக்காரர்கள் | 2,67,33,17,635.45 | 1,75,74,83,261.25 |
| - செலவுகள் | 1,29,17,97,023.31 | 1,41,91,11,490.42 |
| பெறப்பட்ட வட்டி | | |
| - அரசு கடன்களுக்கு | 1,60,05,25,083.95 | 83,66,38,111.95 |
| - பத்திரங்கள் | 0.00 | 0.00 |
| - நிதி நிறுவனங்களுக்கு | 17,75,64,389.17 | 20,52,08,415.17 |
| (ஆ) இதர பொறுப்புகள் | | |
| - பணியாளர்கள் | 1,97,07,83,763.11 | 1,37,90,55,212.11 |
| - மற்றவை | 2,56,73,36,563.77 | 2,73,02,84,958.17 |
| | | |

| விவரங்கள் | 2020–21 (ரூபாய்) | 2019–20 (ரூபாய்) |
|---|---|---|
| சேர்ந்துள்ள பற்றாக்குறை | –18,77,73,99,669.92 | –15,43,33,41,057.88 |
| கழிக்க: வருமானத்திற்கு மேல் செலவழித்தல் | –1,26,03,08,569.56 | –3,34,40,58,612.04 |
| சேர்ந்துள்ள பற்றாக்குறை | –20,03,77,08,239.48 | –18,77,73,99,669.92 |

## அட்டவணை - ஊ - நிலையான சொத்துக்கள்

| விவரங்கள் | (ரூபாய்) | 2020–21 (ரூபாய்) | 2019–20 (ரூபாய்) |
|---|---|---|---|
| அ. அடக்கவிலையில் குடிநீர் வழங்கல் | 32,83,25,10,045.89 | | |
| கழிக்க: தேய்மானம் | 17,26,86,81,313.35 | 15,56,38,28,732.54 | 16,24,06,37,282.12 |
| ஆ. அடக்கவிலையில் கழிவுநீரகற்றல் | 16,11,79,22,994.00 | | |
| கழிக்க: தேய்மானம் | 9,04,23,48,157.03 | 7,07,55,74,836.97 | 7,57,22,52,696.26 |
| இ. அடக்கவிலையில் பொதுவானவை | 97,35,33,722.72 | | |
| கழிக்க: தேய்மானம் | 74,08,70,617.43 | 23,26,63,105.29 | 25,90,52,653.91 |
| ஈ. முன்னேற்றத்திலுள்ள திட்டங்கள் | | | |
| 1. குடிநீர் வழங்கல் | | | |
| – வைப்புத்தொகை பணிகள் | 6,30,66,01,947.98 | | |
| – இதர பணிகள் | 25,56,45,06,973.35 | 31,87,11,08,921.33 | 28,24,23,54,676.88 |
| 2. கழிவுநீரகற்றல் | | | |
| – வைப்புத்தொகை பணிகள் | 8,93,85,05,259.97 | 33,99,57,71,871.66 | 28,93,61,15,177.32 |
| – இதர பணிகள் | 25,05,72,66,611.69 | | |
| 3. பொதுவானவை | | 19,06,51,411.55 | 17,44,24,632.25 |
| உ. வறட்சி /வெள்ள நிவாரணப் பணிகள் | | 1,40,51,80,496.20 | 1,37,27,66,250.67 |
| ஊ. வறட்சி நிவாரணப் பணிகள் – பொதுவானவை | | 23,23,28,663.32 | 23,23,28,663.32 |
| மொத்தம் | | 90,56,71,08,038.86 | 83,02,99,32,032.73 |

## அட்டவணை – எ - நடப்பு சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகைகள்

| விவரங்கள் | (ரூபாய்) | 2020–21 (ரூபாய்) | 2019–20 (ரூபாய்) |
|---|---|---|---|
| அ. பொருட்கள் | | 7,71,72,343.98 | –4,32,37,109.44 |
| ஆ. கடனாளிகள் | | | |
| 1, குடிநீர் கட்டணம் அளவுமானி பொருத்தப்பட்டது | 54,86,68,185.78 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | 5,63,23,147.90 | 49,23,45,037.88 | 52,82,60,155.50 |
| 2, குடிநீர் கட்டணம் அளவுமானி பொருத்தப்படாதது | 1,27,08,85,154.41 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | 26,36,94,457.35 | 1,00,71,90,697.06 | 80,86,75,974.79 |
| 3, வரிகள் | 2,56,13,97,567.88 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | 17,94,99,167.05 | 2,38,18,98,400.83 | 1,27,83,33,678.58 |
| 4, பொது ஆணைக் குழுக்களிடமிருந்து வரவேண்டியவை | | 1,83,07,971.27 | 1,83,07,971.27 |
| 5, கட்டண கடனாளிகள் | | | |
| – அரசுக்கு ஊர்தி மூலம் குடிநீர் வழங்கல் | 9,07,04,471.76 | | |
| – கழிவுநீரகற்றல் சேவை கட்டணம் | 88,13,20,659.13 | | |
| – குடிநீர் வழங்கல் இதர வகைகள் | –94,820.50 | | |
| – கட்டுப்பாட்டு கூடுதல் கட்டணம் | 25,77,85,729.36 | | |
| – மதிப்பிழந்த காசோலை | 9,99,393.30 | | |
| – சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் | 8,27,07,616.23 | 1,31,34,23,049.28 | 95,16,98,897.90 |
| வரவேண்டிய நூற்று வீதக்கட்டணம் | | 0.00 | 0.00 |
| பெறத்தக்க வாடகை | | 1,28,89,817.00 | 1,28,89,817.00 |
| மாநில சரக்கு சேவை வரி,, மத்திய சரக்கு சேவை வரி மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி | | 0.00 | 0.00 |
| செ.கு. வா. பணிக்கொடை . பொ. குழுமம் | | 1,20,34,006.50 | 1,20,34,006.50 |

| | | | |
|---|---|---|---|
| வரி பிடித்தங்கள் (TDS) | | 3,18,84,840.93 | 4,02,22,851.93 |
| சென்னை மாநகராட்சியிடமிருந்து பெறப்பட வேண்டியவை – புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் | | 0.00 | 0.00 |
| தலைமை அலுவலக / பகுதி அலுவலக பரிமாற்றம் | | 1,72,78,31,672.84 | 1,68,15,16,553.71 |
| வசூல் கட்டுப்பாடு | | 10,18,25,454.54 | 18,25,58,474.01 |
| **இ. கையிருப்பு மற்றும் வங்கி இருப்புகள்** | | | |
| – அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் நடப்புக்கணக்கு மற்றும் ரிசர்வ் வங்கி இருப்பு கணக்கு | | 4,55,61,24,293.59 | 2,13,57,06,839.86 |
| – அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் குறுகிய கால வைப்புத் தொகை | | 6,01,78,22,042.53 | 5,27,01,01,086.42 |
| – கையிருப்புத் தொகை | | 10,717.35 | 17,995.35 |
| – பணி முன்செலவு கணக்கு– பணியாளர் முன்பணம் – | | 3,94,799.00 | 3,69,794.00 |
| **ஈ. கடன் மற்றும் முன்பணம்** | | | |
| – ஒப்பந்தக்காரர்கள் | | 97,89,24,827.00 | 12,13,81,295.00 |
| – பொருட்கள் வழங்குபவர்கள் | | 4,42,39,498.00 | 3,81,66,394.00 |
| – செலவினங்களுக்கு | | 5,37,87,298.10 | 5,35,57,135.10 |
| – பணியாளர்கள் | | 15,49,00,753.29 | 12,67,85,048.29 |
| – மற்றவை | | 5,49,189.79 | 5,49,189.79 |
| **உ. வைப்புத் தொகை மற்றும் முதலீடு** | | | |
| **அ. பணியாளர்கள்** | | | |
| – சிறப்பு சேமநல முதலீடு | | 7,60,14,523.00 | 8,22,32,606.00 |
| – பொது சேமநல முதலீடு | | 1,22,11,21,301.34 | 1,08,26,55,533.13 |
| – ஓய்வூதிய நிதி முதலீடு | | 1,02,09,43,397.00 | 1,23,24,37,658.20 |
| – செ. கு. வா பணியாளர் சிறப்பு மருத்துவ நலநிதி | | 1,91,64,366.00 | 2,10,31,941.66 |
| –விபத்து உள்ளடக்கிய முதலீடு | | 1,13,13,729.00 | 1,33,35,969.58 |
| கூடியுள்ள வட்டி – மற்றவை | | 33,06,75,082.99 | 26,01,90,048.65 |
| கூடியுள்ள வட்டி – ப.ஓ.தி. நிதி முதலீடு | | 8,76,69,105.32 | 4,99,00,919.00 |
| கூடியுள்ள வட்டி – ஓய்வூதிய முதலீடு | | 18,17,49,043.31 | 10,61,94,087.27 |

| | | | |
|---|---|---|---|
| பணிக்கொடை நிதி முதலீடு | | 47,078.00 | 47,078.00 |
| **ஆ. மற்றவை** | | | |
| – வைப்புத் தொகை | | 69,36,85,568.93 | 23,48,56,146.46 |
| – பொறுப்பாட்சி மற்றும் நிறுத்தி வைத்தல் முதலீடு | | 47,88,13,116.00 | 43,54,56,033.16 |
| – நிலையான சொத்து புதுப்பித்தல் நிதி முதலீடு | | 24,02,05,520.00 | 99,93,52,443.19 |
| **மொத்தம்** | | **23,34,49,58,541.65** | **17,73,55,86,513,86** |

## அட்டவணை - ஏ - குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீரகற்று கட்டணங்கள்

| விவரங்கள் | 2020–21 (ரூபாய்) | 2019–20 (ரூபாய்) |
|---|---|---|
| **அ. அளவுமானி பொருத்தப்பட்டவை** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 23,98,12,554.50 | 19,53,00,443.25 |
| வணிகத்திற்கு | 1,50,48,67,158.75 | 1,34,58,43,442.47 |
| நிறுவனங்களுக்கு | 20,21,75,002.50 | 16,61,66,431.00 |
| நகராட்சிகள் | 5,40,00,229.88 | 3,05,14,237.74 |
| **ஆ. அளவுமானி பொருத்தப்படாதவை** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 68,81,44,766.50 | 67,08,30,648.00 |
| வணிகத்திற்கு | 39,20,31,624.00 | 38,63,86,628.90 |
| நிறுவனங்களுக்கு | 48,07,620.00 | 46,84,197.00 |
| சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் விற்பனை | 16,75,37,785.60 | 25,27,58,796.60 |
| லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் | 43,56,70,015.22 | 70,41,03,536.56 |
| கழிவுநீரகற்று கட்டணங்கள் | 1,12,41,25,819.48 | 74,66,84,660.15 |
| **மொத்தம்** | **4,81,31,72,576.43** | **4,50,32,73,021.67** |

## அட்டவணை – ஐ – குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி

| விவரங்கள் | 2020–21 (ரூபாய்) | 2019–20 (ரூபாய்) |
|---|---|---|
| குடிநீர் வரி | 49,85,87,886.62 | 45,78,77,760.21 |
| கழிவுநீரகற்று வரி | 1,82,31,11,268.38 | 1,67,86,18,639.79 |
| **மொத்தம்** | **2,32,16,99,155.00** | **2,13,64,96,400.00** |

## அட்டவணை - ஓ - இதர வருமானம்

| விவரங்கள் | 2020–21 (ரூபாய்) | 2019–20 (ரூபாய்) |
|---|---|---|
| | | |
| விண்ணப்பக்கட்டணம் – ஆட்சேர்ப்பு | 0.00 | 0.00 |
| பழைய /உபயோகமற்ற பொருட்கள் விற்பனை | 14,48,718.00 | 18,96,060.00 |
| வங்கியிலிருந்து பெறப்பட்ட வட்டி | 51,21,21,456.33 | 71,28,94,692.22 |
| இதர வட்டி | 2,04,87,496.00 | 2,69,39,111.00 |
| ஒப்பந்த படிவங்கள் விற்பனை | 8,54,387.68 | 3,99,025.00 |
| சரி செய்யப்பட்ட இழப்பீடு | –4,98,98,506.00 | 2,51,47,197.00 |
| ஈட்டிய ஆலோசனைக் கட்டணம் | 0.00 | 10,00,000.00 |
| மற்ற இதர வருமானம் | 31,01,01,585.74 | 47,01,24,598.10 |
| **மொத்தம்** | **79,51,15,137.75** | **1,23,84,00,683.32** |

## அட்டவணை - ஓ - இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள்

| விவரங்கள் | 2020–21 (ரூபாய்) | 2019–20 (ரூபாய்) |
|---|---|---|
| **அ. இயக்குதல் செலவுகள்** | | |
| மின்சக்தி | 2,15,44,75,941.00 | 2,14,09,58,947.56 |
| இரசாயனப் பொருட்கள் | 4,34,64,425.94 | 3,16,66,022.58 |
| எரிபொருள் மற்றும் மசகுகள் | 11,25,66,906.00 | 10,62,26,168.00 |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடுகள் | –3,37,70,072.00 | –3,18,67,851.00 |
| உதிரிக் கருவிகள் | 33,60,429.27 | 44,96,973.28 |
| சுமைக் கட்டணமும் காப்பீடும் | 1,17,815.00 | 1,17,815.00 |
| கழிவுநீர் ஊர்தி வாடகைக் கட்டணம் | 2,46,17,023.00 | 1,64,38,731.00 |
| தூர்வாருதல் | 18,98,71,401.00 | 15,85,41,088.48 |
| இதர இயக்குதல் செலவுகள் | 1,73,30,10,553.57 | 1,89,48,61,146.17 |
| **மொத்தம் – அ** | **4,22,77,14,422.78** | **4,32,14,39,041.07** |
| **ஆ. பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்** | | |
| குழாய் வழிகள், நீரேற்றும் நிலையம் மற்றும் இதர உபகரணங்கள் | 1,64,30,68,279.83 | 1,66,07,05,879.79 |
| கட்டிடம் மற்றும் கட்டிடப் பணிகள் | 32,13,57,945.05 | 31,94,08,389.73 |

| | | |
|---|---|---|
| வாகனங்கள் | 26,68,846.80 | 26,24,836.00 |
| இதர பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள் | 43,25,21,722.47 | 36,33,91,257.68 |
| **மொத்தம் – ஆ** | **2,39,96,16,794.15** | **2,34,61,30,363.20** |
| **மொத்தம் – (அ + ஆ)** | **6,62,73,31,216.93** | **6,66,75,69,404.27** |

## அட்டவணை - ஔ- பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள்

| விவரங்கள் | 2020–21 (ரூபாய்) | 2019–20 (ரூபாய்) |
|---|---|---|
| ஊதியம், கூலி மற்றும் படிகள் | 3,15,48,20,066.00 | 3,37,12,24,229.00 |
| பணியாளர் நலச் செலவுகள் | 9,67,85,968.31 | 5,10,56,009.91 |
| அயல்துறையிலிருந்து வந்தவருக்குப் பங்களிப்பு | 27,33,655.00 | 25,88,907.00 |
| மொத்தம் | **3,25,43,39,689.31** | **3,42,48,69,145.91** |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடுகள் | −74,85,82,012.87 | −78,87,81,812.58 |
| **மொத்தம்** | **2,50,57,57,676.44** | **2,63,60,87,333.33** |

## அட்டவணை - அஅ - அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள்

| விவரங்கள் | 2020–21 (ரூபாய்) | 2019–20 (ரூபாய்) |
|---|---|---|
| **அலுவலகச் செலவுகள்:** | | |
| வாடகை மற்றும் வரி | 1,23,23,520.00 | 1,49,16,412.00 |
| தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல நிதி – பங்களிப்பு செலவு | 2,606.00 | 0,00 |
| மின் கட்டணம் | 1,10,51,915.00 | 1,52,12,592.00 |
| கம்பியில்லாத மற்றும் தகவல் தொடர்பு செலவு | 10,82,468.00 | 8,20,505.00 |
| தொலைப்பேசிக் கட்டணங்கள் | 96,14,271.72 | 68,37,937.86 |
| தபால் மற்றும் தந்தி | 63,59,001.00 | 28,66,927.00 |
| அச்சிடுதல் மற்றும் எழுது பொருட்கள் | 1,03,10,211.00 | 1,11,17,778.40 |
| பொருட்காட்சி மற்றும் விளம்பரம் | 9,69,820.00 | 62,57,517.00 |
| மற்ற அலுவலகச் செலவுகள் | 1,79,67,557.50 | 94,54,575.62 |
| பயணம் மற்றும் பயணப்படி | 1,79,29,882.00 | 3,33,54,282.10 |
| **நிர்வாகச் செலவுகள் :** | | |
| வருவாய் சேகரிப்பு செலவுகள் | 9,78,597.00 | 9,16,236.00 |
| தணிக்கை கட்டணங்கள் | 2,40,000.00 | 2,40,000.00 |
| வழக்கு செலவுகள் | 1,09,14,221.00 | 20,20,940.00 |
| ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் செலவுகள் | 33,27,650.00 | 24,08,021.00 |

| | | |
|---|---|---|
| வங்கிக் கட்டணம் | 45,27,846.34 | 32,15,053.86 |
| மதிப்பூதியம் | 0.00 | 0.00 |
| மற்ற நிர்வாகச் செலவுகள் | 68,43,920.47 | 2,51,19,236.16 |
| பொறுப்புறுதி ஆணையக்கணக்கு | 27,96,021.00 | 32,09,185.00 |
| **மொத்தம்** | **11,72,39,508.03** | **13,79,67,199.00** |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடு | −3,51,80,325.53 | −4,14,97,423.62 |
| **மொத்தம்** | **8,20,59,182.50** | **9,64,69,775.38** |

## அட்டவணை - அஆ - முந்தைய கால சரிகட்டல்

| விவரங்கள் | 2020−21 (ரூபாய்) | 2019−20 (ரூபாய்) |
|---|---|---|
| **அ. பற்று :** | | |
| குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | 13,88,07,120.72 | 1,03,60,73,679.05 |
| குடிநீர் கட்டணம் −அளவுமானி பொருத்தப்படாதது | 2,02,74,967.94 | 28,70,15,467.98 |
| குடிநீர் கட்டணம் − அளவுமானி பொருத்தப்பட்டவை | 37,80,261.90 | 7,46,60,550.01 |
| கழிவுநீரகற்று கட்டணம் | 2,41,41,003.35 | 14,28,28,939.98 |
| தேய்மானம் | 49,72,295.25 | 1,49,34,418.39 |
| வட்டி | 29,85,39,606.00 | 3,30,91,997.17 |
| வாடகை | 0,00 | 26,38,473.75 |
| நிதி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட வட்டி | 0,00 | 1,90,000.00 |
| சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தப்பட்டது − உள்ளீட்டு வரிக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது | 0,00 | 28,17,58,735.78 |
| இதர செலவுகள் | 73,41,46,238.08 | 1,13,75,600.00 |
| **மொத்தம் (அ)** | **1,22,46,61,493.24** | **1,88,45,67,862.11** |

| | | |
|---|---|---|
| ஆ. வரவு : | | |
| குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | 18,58,92,263.02 | 17,57,42,730.70 |
| குடிநீர் கட்டணம் –அளவுமானி பொருத்தப்படாதது | 4,51,30,104.47 | 5,09,93,349.69 |
| குடிநீர் கட்டணம் –அளவுமானி பொருத்தப்பட்டவை | 1,65,64,562.82 | 1,35,85,104.25 |
| கழிவுநீரகற்று கட்டணம் | 1,80,54,797.20 | 2,48,66,862.03 |
| வட்டி | 14,63,13,940.70 | 85,55,26,789.33 |
| இதர செலவுகள் | 24,546.90 | 1,33,53,234.16 |
| **மொத்தம் (ஆ)** | **41,19,80,215.11** | **1,13,40,68,070.16** |
| **மொத்தம் (அ+ஆ)** | **81,26,81,278.13** | **75,04,99,791.95** |

## அட்டவணை - அஇ - பற்று சேவை கட்டணங்கள்

| விவரங்கள் | 2020–21 (ரூபாய்) | 2019–20 (ரூபாய்) |
|---|---|---|
| அரசுக்கடன்களின் வட்டி | 76,38,86,972.00 | 83,66,38,112.00 |
| தனியார் நிதிநிறுவனங்களின் வட்டி | 20,89,01,706.00 | 21,18,55,681.33 |
| **மொத்தம்** | **97,27,88,678.00** | **1,04,84,93,793.33** |
| கழிக்க: திட்டங்களின் வட்டி ஒதுக்கீடு | 13,62,76,900.50 | 13,46,06,433.50 |
| **மொத்தம்** | **83,65,11,777.50** | **91,38,87,359.83** |

# அட்டவணை – அ௬
# குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

## 1. நிதி அறிக்கைகள் தயாரிப்பதற்கான அடிப்படை

இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளின்படியும் வாரியம் பின்பற்றும் வரலாற்று பாரம்பரியமிக்க கணக்கியல் திரட்டல் அடிப்படையில் நிலையான நடைமுறைகளின்படி நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. வாரியம் பின்பற்றும் நிலையான நடைமுறையின் படி வடிவம் மற்றும் முறையில் (சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியச் சட்டம், 1978 இன் பிரிவு 38(1) இன் படி நிதிநிலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய படிவம் மற்றும் முறை இன்னும் அறிவிக்கப்படவில்லை. நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் முந்தைய ஆண்டில் பின்பற்றப்பட்டவற்றுடன் ஒத்துப்போகின்றன.

## 2. வருவாய் அங்கீகாரம்:

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், கீழ்க்கண்டவற்றைத் தவிர, ஆண்டு முழுவதும் பெறத்தக்கதாக நிர்ணயிக்கப்பட்ட தொகைகளை திரட்டல் அடிப்படையில் வருமானத்தை அங்கீகரிக்கிறது:

அ. கூடுதல் கட்டணம்
ஆ. கழிபொருள் விற்பனை
இ. மானியங்கள்
ஈ. சொத்துக்களிலிருந்து வாடகை
உ. அபராதம்
ஊ. ஒப்பந்த படிவங்கள் விற்பனை

## 3. சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் :

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களை கையகப்படுத்துதல் செலவு / கட்டுமானம், குறைவாக சேர்ந்த தேய்மானம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. கொள்முதல் விலை, மூலதனமாக்கல் அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டால் கடன் வாங்கும் செலவு மற்றும் அதன் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்காக சொத்தை அதன் செயல்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாகக் கூறப்படும் பிற செலவு ஆகியவை அடங்கும்.

முன்னேற்றத்திலுள்ள திட்டத்தின் அடிப்படையில், திட்டத்தில் ஏற்படும் செலவுகள் கணக்கிடப்படுன்றன. சம்பளம், ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள், அலுவலகச் செலவுகள் மற்றும் நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் மசகுகள் ஆகியவை வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட சதவீதத்தில் முன்னேற்றத்திலுள்ள திட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்றன.

4. **தேய்மானம் :**

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட விகிதங்களின்படி, சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் தேய்மானம் நேர்கோட்டு முறையின் அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. செப்டம்பர் 30 ஆம் தேதிக்கு முன்பு சொத்துக்கள் கணக்கில் கொண்டு வரப்பட்டால் முழு ஆண்டிற்கும், அக்டோபர் 1 ஆம் தேதிக்குப் பிறகு மார்ச் 31 ஆம் தேதி வரை சொத்துக்கள் கணக்கில் கொண்டு வரப்பட்டால் அரை வருடத்திற்கும் தேய்மானம் விதிக்கப்படும்.

நிறைவு அறிக்கைக்காகக் காத்திருக்கும், முன்னேற்றத்திலுள்ள உள்ள திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சொத்துக்களின் தேய்மானம், நேர்கோட்டு முறையின் அடிப்படையில் 5 சதவீதம் தற்காலிக விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது.

5. **சரக்குகளின் மதிப்பீடு :**

சரக்குகள் எடையுள்ள சராசரி செலவு முறையில் அளவிடப்படுகின்றன. சரக்குகளின் விலை, கொள்முதல் செலவு மற்றும் அவற்றை அவற்றின் தற்போதைய இருப்பிடம் மற்றும் நிலைக்கு கொண்டு வருவதற்கான பிற செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

6. **அரசு மானியங்களுக்கான கணக்கு :**

அரசாங்க மானியமானது, செயல்படுத்துபவரின் பங்களிப்பு அரசாங்க மானியத்தின் ஒரு பகுதியாக கருதப்படுகின்றன. அரசு மானியங்களின் குறிப்பிட்ட நிலையான சொத்துக்கள் இருப்புநிலைக் குறிப்பில் அரசு மானியங்கள் தலைப்பின் கீழ் தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளன. அரசாங்க மானியங்கள் வருமானம் மற்றும் செலவுக் கணக்கில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

7. **கடன் வாங்கும் செலவுகள் :**

கடன் வாங்கும் செலவுகள் வட்டி மற்றும் கடன் செலவினங்களை உள்ளடக்கியது. கடன் வாங்கும் செலவுகள் தகுதிவாய்ந்த சொத்துக்களை கையகப்படுத்தல், கட்டுமானம் அல்லது சொத்துக்களின் உற்பத்தி அத்தகைய சொத்துக்களின் விலையின் ஒரு பகுதி மூலதனமாக்கப்படுகிறது. மற்ற அனைத்து கடன் செலவுகளும் அதே ஆண்டில் வருவாயாக கணக்கிடப்படுகின்றன.

8. **பணியாளர் நன்மைகள் :**

ஓய்வூதிய சலுகைகள் "நீங்கள் செல்லும்போது செலுத்துங்கள் முறை" யின் கீழ் கணக்கிடப்படுகின்றன. (பண அடிப்படையில்)

9. **வருமான வரிகளுக்கான கணக்கு :**

வருமான வரிச் சட்டம், 1961 இன் விதிகளின்படி நடப்பு வரி என்பது நிர்ணயிக்கப்பட்ட ஆண்டிற்கான வரிக்குரிய வருமானத்தில் செலுத்த வேண்டிய வரித் தொகையாகும். வரி

விதிக்கக்கூடிய வருமானத்திற்கும் கணக்கியல் வருமானத்திற்கும் இடையிலான நேர வேறுபாட்டின் விளைவாக ஒத்திவைக்கப்பட்ட வரியானது வரி விகிதங்கள் மற்றும் வரிச் சட்டங்களைப் பயன்படுத்துவதற்கு இயற்றப்பட்டது அல்லது அறிக்கை தேதி முறையில் இயற்றப்பட்டது ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள், எதிர்காலத்தில் போதுமான வரி வருமானம் கிடைக்கும் என்பதற்கான உறுதியான ஆதாரத்தின் மூலம் மெய்நிகர் உறுதிப்பாடு இருக்கும் அளவிற்கு அங்கீகரிக்கப்படுவதால், இது போன்ற ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்களை உணர முடியும்.

## 10. நிகர லாபம் அல்லது நட்டம். முந்தய கால சரிகட்டல் மற்றும் கணக்கியல் கொள்கைகளில் மாற்றங்கள் :

முந்தைய ஆண்டு நிதி அறிக்கைகள் தயாரிப்பதில் உள்ள வரவு மற்றும் செலவுப் பிழைகள் நடப்பு ஆண்டில் குறிப்பிடுவது முந்தைய காலச் சரிகட்டுதல் ஆகும். மேலும் வரவு செலவு தொடர்பான முந்தைய ஆண்டுகளோடு தொடர்புடைய இந்த ஆண்டு செலவுகள் கூட முந்தய கால சரிகட்டுதலாக கருதப்படுகின்றன.

## 11. இருப்புநிலைக் குறிப்புத் தேதிக்குப் பிறகு நிகழும் தற்செயல்கள் மற்றும் நிகழ்வுகள் :

இருப்புநிலைக் குறிப்பிற்கு பின் நிகழ்ந்த நிகழ்வுகள் என்பது இருப்புநிலைக் குறிப்புத் தேதி மற்றும் நிதி அறிக்கை வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாட்களுக்கு இடையே நிகழ்ந்த நிகழ்வுகள் ஆகும். மேலும் நிதிநிலை அறிக்கைகளில் நிதி பாதிப்பு ஏதேனும் இருந்தால் அதை அங்கீகரித்தல் அல்லது வெளிப்படுத்துதல்.

## 12. ஐயப்பாடுள்ள கடன்களுக்கான ஒதுக்கீடு :

குடிநீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணம் செலுத்தும் கடனாளிகள் ஐயப்பாடுள்ள கடன்களுக்காக, அளவுமானி உள்ளோருக்கும், அளவுமானி இல்லாதோருக்கும் முறையே 20 சதவீதம் மற்றும் 10 சதவீதமும் மற்றும் வரிகளுக்கு 10 சதவீதமும் வேறுபடும் தொகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13. ஒதுக்கீடு தற்செயல் பொறுப்புகள் மற்றும் தற்செயலான சொத்துக்கள் :

வரவு செலவு திட்ட அனுமதியின் அளவிற்கு செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன.

வாரியத்திற்கு எதிரான நீதிமன்றத்திலுள்ள ஒவ்வொரு வழக்கும் சட்டபடியாக உண்மையான மதிப்பாய்வு செய்யப்பட்ட போதும் வாரியம் கடனாக ஏற்றுக் கொள்ளாமல் தற்செயலான பொறுப்பாக வைத்துள்ளது.

# கணக்குகள் மீதான குறிப்புகள் 2020-21

## அட்டவணை - அஉ

## 2021 மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள் மீதான குறிப்புகள் இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள்

### I. அட்டவணை - அ - பங்களிப்பு

1 பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பங்களிப்பு ரூ. 875.40 கோடி (சென்ற ஆண்டு– ரூ. 803.91 கோடி) :

குடிநீர் / கழிவு நீர் இணைப்பு பணிகளுக்காக பொதுமக்களிடமிருந்து முந்தைய ஆண்டில் பெறப்பட்ட தொகை ரூ.71.49 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 55.75 கோடி) நடப்பு ஆண்டில் 'பொதுமக்களிடமிருந்து பங்களிப்பு' கணக்கில் மாற்றப்பட்டுள்ளது.

2. பொறுப்புகளை விட அதிகமான சொத்துக்கள் :

முந்தைய ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட நிலையான நடைமுறையின் படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை மற்றும் தற்கால வாரியம் போன்றவற்றிலிருந்து முறையே ரூ. 15.92 கோடி (சென்ற ஆண்டு ரூ.15.92 கோடி), ரூ. 5.19 கோடி (சென்ற ஆண்டு ரூ.5.19கோடி) மற்றும் ரூ. 0.08 கோடி (சென்ற ஆண்டு ரூ. 0.08 கோடி) மாற்றப்பட்ட கடன்களின் மேல் உள்ள சொத்துக்களின் அதிகப்படியான தொகையானது அட்டவணை – அ – பங்களிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

3. சொத்துக்களுக்கு மிஞ்சிய கடன்கள் :

முந்தைய ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட நிலையான நடைமுறையின் படி முன்னாள்42 உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் மீதான அதிகபடியான கடன்கள், 31 மார்ச் 2020 ன் நிலவரப்படி மொத்தத் தொகையான ரூ.43.69 கோடி (சென்ற ஆண்டு ரூ. 43.69 கோடி) அட்டவணை – அ – பங்களிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

4. மூலதன கையிருப்புகள் :

முந்தைய ஆண்டுகளில் பின்பற்றப்பட்ட நிலையான நடைமுறையின் படி சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் (சிஎம்டிஏ) மூலமாகவும், விண்ணப்பதாரர்களிடமிருந்தும் நேரடியாக அழைத்தால் இணைப்பு மற்றும் இல்லம்தோறும் இணைப்பு ஆகியவற்றின் மூலமாகவும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கட்டணங்களுக்காக இந்த ஆண்டில் பெறப்பட்ட தெகை ரூ.117.78கோடி (சென்ற ஆண்டு ரூ. 73.75 கோடி) மூலதன இருப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

5. <u>நிலையான சொத்துக்களை புதுப்பித்தலுக்கான நிதி :</u>

இந்த நிதியானது ரூ.110.56 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 110.56 கோடி) நிலையான சொத்து புதுப்பித்தலுக்கான நிதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது, இதற்க்காக ஆண்டு முழுவதும் ரூ.24.02 கோடி (சென்ற ஆண்டு – ரூ.99.93 கோடி) முதலீடு கிடைக்கும்.

II. <u>அட்டவணை - ஆ - அரசு மானியங்கள் – ரூ. 6621.81 கோடி ( சென்ற ஆண்டு ரூ. 5666.75 கோடி ) :</u>

எழில்நகர திட்டம், உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள், கொடுங்கையூர் மற்றும் கோயம்பேட்டில் உள்ள நாள் ஒன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் மூ.நி.ச.ப.ஆலை, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் / புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம், மாநில பேரிடர் நிவாரண நிதி, நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை, தேர்வாய்கண்டிகை முதல் பூண்டி வரை, அனைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மறுசீரமைப்பு, 14ம் மத்திய நிதி ஆணையம், CGF தூய்மை இந்தியா திட்டம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் போன்ற வெவ்வேறு திட்டங்களுக்கு அரசிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் தனித்தனியே கீழ்கண்டவாறு காண்பிக்கப்பட்டுள்ளது.

1. <u>அரசு மானியம் (இரண்டாவது சென்னை திட்டம் மற்றும் சென்னை நகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம்) – ரூ. 488.97 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 488.97 கோடி) :</u>

2004–05 முதல் இரண்டாம் சென்னைத் திட்டம் (ரூ. 137.38 கோடி) மற்றும் 2009–10 முதல் சென்னை நகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம் (ரூ.351.59 கோடி) ஆகிய திட்டங்களின் கணக்கில் 31 மார்ச் 2021 அன்று வரை நிலுவையில் உள்ள தொகை அப்படியே உள்ளது.

2. <u>அரசு மானியம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்/ புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன்) – ரூ. 774,74 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 596,15 கோடி) :</u>

புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களுக்காக ரூ.178.59 கோடி (சென்ற ஆண்டு ரூ.275.48 கோடி) மானியமாக வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

3. <u>அரசு மானியம் (TNIPP) – நெம்மேலியிலுள்ள கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் – ரூ.1094.97 கோடி ( சென்ற ஆண்டு – ரூ. 893.22 கோடி) :</u>

2021மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டில். நெம்மேலியிலுல்ல நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் ஆலைக்கு ரூ.201.75 கோடி (சென்ற ஆண்டு – இல்லை) மானியமாக வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

4. அரசு மானியம் – மற்றவை ரூ.1536.40 கோடி (சென்ற ஆண்டு – ரூ.1399.43 கோடி):

14 வது மத்திய நிதிக் குழுவிற்கு ரூ. 37.53 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 13.89 கோடி) முந்தைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் பெறப்பட்ட கடன்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதி ஆகிய நிறுவனங்களுக்கு அசல் தொகையை திருப்பி செலுத்துவதற்காக ரூ. 4.85 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 12.66 கோடி), அனைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மறுசீரமைப்புக்கு ரூ. 48.03 கோடி (சென்ற ஆண்டு – இல்லை), உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளுக்கு ரூ. 1.16 கோடி (சென்ற ஆண்டு – இல்லை), மூலதன மானிய நிதிக்கு ரூ. 38.41 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 7.05 கோடி), சோழிங்கநல்லூரில் உள்ள நாள் ஒன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு – இல்லை (சென்ற ஆண்டு – ரூ. 25.33 கோடி), மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு – இல்லை (சென்ற ஆண்டு – ரூ. 37.50 கோடி), ஆசிய வளர்ச்சி வங்கிக்கு மானியம் ரூ. 7,00 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 27.00 கோடி), ஆகிய பணிகளுக்காக அரசிடமிருந்து ரூ. 136.97 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 123.43 கோடி) மானியமாக பெறப்பட்டுள்ளது.

5. அரசு மானியம் – சீர்மிகு நகர திட்டம் ரூ. 61.27 கோடி (சென்ற ஆண்டு –ரூ. 10.26 கோடி) :

சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ. 51.01 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 7.31 கோடி) மானியமாக வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

6. அரசு மானியம் – தூய்மை இந்தியா திட்டம் ரூ. 21.19 கோடி (சென்ற ஆண்டு –ரூ. 14.72 கோடி) :

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.6.48 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 14.72 கோடி) மானியமாக வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

7. அரசு மானியம் – சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை ரூ. 75.59 கோடி (சென்ற ஆண்டு –ரூ. 38.87 கோடி):

சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை திட்டத்தின் கீழ் ரூ.36.72 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 38.87 கோடி) மானியமாக வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

8. அரசு மானியம் (TNIPP) – தேர்வாய்க்கண்டிகை முதல் பூண்டி வரை ரூ. 70.62 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 66.05 கோடி):

தேர்வாய்க்கண்டிகை முதல் பூண்டி வரை திட்டத்தின் கீழ் ரூ.4.57 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 4.25 கோடி) மானியமாக வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

9. அரசு மானியம் (GOTN திட்ட உதவியுடன்) – நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் ஆலை ரூ.14.32 கோடி (சென்ற ஆண்டு – ரூ.1.57 கோடி):

நெம்மேலியிலுள்ள நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் ஆலை கட்டுமானப்பணிக்காக ரூ.12.75 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 1.57 கோடி) மானியமாக வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

10. அரசு மானியம் – CMCDM (பெருநகர திட்டம்) – ரூ. 1052.35 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 836.99 கோடி):

தமிழக அரசிடமிருந்து ரூ. 215.36 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 41.13 கோடி) பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் மானியமாக பெறப்பட்ட தொகை முறையே 2013–14 ஆம் ஆண்டு ரூ. 21.07 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 28.34 கோடி), 2015–16 ஆம் ஆண்டு ரூ. 47.05 கோடி (சென்ற ஆண்டு – இல்லை), 2018–19 ஆம் ஆண்டு ரூ.22.70 கோடி (சென்ற ஆண்டு – ரூ.12.79 கோடி), 2020–21 ஆம் ஆண்டு ரூ.53.92 கோடி (சென்ற ஆண்டு – இல்லை) மற்றும் 2020–21 ஆம் ஆண்டு ரூ.70.62 கோடி (சென்ற ஆண்டு – இல்லை).

11. அரசு மானியம் – நாள் ஒன்றுக்கு 4 5 மில்லியன் லிட்டர் மூன்றாம் நிலை எதிர்மறை சவ்வூடுபரவல் சுத்திகரிப்பு ஆலை – ரூ.510.48 கோடி ( சென்ற ஆண்டு – ரூ. 469.98 கோடி):

வாரியம் 2020–21 ஆம் ஆண்டு நாள் ஒன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் மூன்றாம் நிலை எதிர்மறை சவ்வூடுபரவல் சுத்திகரிப்பு ஆலை திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ரூ.40.50 கோடி (சென்ற ஆண்டு ரூ.136.24 கோடி) மானியமாக பெற்றுள்ளது. அவை முறையே ரூ.25.50 கோடி (சென்ற ஆண்டு ரூ.97.58 கோடி) கோயம்பேட்டில் உள்ள மூன்றாம் நிலை எதிர்மறை சவ்வூடுபரவல் சுத்திகரிப்பு ஆலை மற்றும் ரூ.15.00 கோடி (சென்ற ஆண்டு ரூ.38.67 கோடி) கொடுங்கையூரில் உள்ள மூன்றாம் நிலை எதிர்மறை சவ்வூடுபரவல் சுத்திகரிப்பு ஆலை.

12. அரசு மானியம் – உள்ளாட்சி அமைப்பின் மானியங்கள் – ரூ.190.34 கோடி (சென்ற ஆண்டு – ரூ.190.34 கோடி):

உள்ளாட்சி அமைப்பின் மானியக் கணக்கில் நிலுவையில் உள்ள தொகை 2014–15 ஆம் ஆண்டிலிருந்து 2021 மார்ச் 31 ஆம் தேதி வரை மாறாமல் உள்ளது.

13. பொறுப்புரிமை மாற்றம் நிதி – ரூ. 730.57 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 660.21 கோடி):

சென்னை மாநகராட்சியுடன் இணைந்து திட்டங்களை மேம்படுத்த பயன்படுத்தபடும் இந்த நிதி, மாநில வரி வருவாயிலிருந்து நிலையான விகிதத்தில் பெறப்படும் மானியத்தை குறிக்கிறது.

ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021 வரையிலான மாதங்களுக்கான மானியத்தை பிரதிபலிக்கும் வகையில் ரூ. 70.36 கோடி (சென்ற ஆண்டு ரூ. 102.76 கோடி) நடப்பு நிதி ஆண்டில் வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

## III. அட்டவணை - இ - நீண்ட கால கடன்கள் :

### 1. அரசிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ. 1522.16 கோடி ( சென்ற ஆண்டு – ரூ. 1522.16 கோடி) :

தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ள கடன் சென்னை திட்டம் I & II மற்றும் இதர திட்டங்களை குறிக்கிறது. இந்த கடன்களுக்கு வட்டி மற்றும் அசல் 2006 –07ம் நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டிலிருந்து வாரியம் அரசுக்கு செலுத்தவில்லை.

31.03.18 வரையிலான நிலுவையில் உள்ள கடன்களை ஒருங்கிணைப்பதற்காக அரசு, அரசாணை எண் 72 மூலம், 31.03.17 வரையிலான காலகட்டத்திற்கு புதிய நிபந்தனைகளுடன் கூடிய விதிமுறைகள் வெளியிட்டுள்ளது.

அரசு ஆணை எண். 72 நிதி (கடன் மற்றும் முன்பணம் பிரிவு) துறை, 25.02.2019ன் தேதிபடி, அரசு கடன் தொகை ரூ. 727.51 கோடி (அதாவது நிலுவையில் உள்ள அசல்) 10.5% வட்டி விகிதத்துடன் மற்றும் ரூ. 794.65 கோடி (நிலுவையில் உள்ள வட்டி) அதாவது வட்டி இல்லாத கடன் ஏப்ரல் 2020 வரை 12 ஆண்டுகள் திருப்பிச் செலுத்தும் காலத்திற்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கடன் கணக்குகளில் 31.03.2021 வரை நிலுவையில் உள்ள மொத்த தொகை ரூ.1522.16 கோடி (சென்ற ஆண்டு ரூ.1522.16 கோடி)

### 2. நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ. 397.72 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 390.83 கோடி):

அ) நடப்பு ஆண்டில் திருப்பி செலுத்திய தொகை ரூ.23.10 கோடி ஆகும், அதில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு ரூ.8.28 கோடி, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திற்கு ரூ.5.61 கோடி மற்றும் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதியியல் சேவை நிறுவனத்திற்கு ரூ.9.21 கோடி அடங்கும் மற்றும் தமிழக நகர்புற உட்கட்டமைப்பு நிதியியல் சேவை நிறுவனத்திடமிருந்து கொடுங்கையூரில் உள்ள நாள் ஒன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் மூ.நி.ச.ப ஆலைக்கு ரூ.30 கோடி கடன் பெறப்பட்டது, இதன் மூலம் ரூ. 397.72 கோடி (சென்ற ஆண்டு ரூ. 390.83 கோடி) இறுதி நிலுவையாக உள்ளது.

ஆ) தமிழக நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகத்திடமிருந்து வாரியத்தால் பெறப்பட்ட கடன் (சென்னை பெருநகர திட்டம், பெருநகர உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்) டிசம்பர் 2016 முதல் செலுத்தப்படாமல் உள்ளது.

இ) மேற்கூறியவை தவிர, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TUFIDCO) மற்றும் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதியியல் சேவை நிறுவனம் லிமிடெட் (TNUIFSL) ஆகியவற்றிலிருந்து பழைய உள்ளாட்சி அமைப்புகளால் பெறப்பட்ட கடன்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மானியம் பெறப்படுகிறது. அவை திருப்பிச் செலுத்தும் அட்டவணையின்படி அப்படியே திருப்பிச் செலுத்தப்படுகிறது.

IV. அட்டவணை - ஈ - ஒத்தி வைக்கப்பட்டள்ள வரவுகளும் மற்றும் வைப்புகளும் :

1. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட கணக்கு ரூ. 19.61 கோடி (சென்ற ஆண்டு.15.83 கோடி) :

அந்தந்த தொகுதிகளில் உள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பின் மேம்பாட்டிற்காக நடப்பாண்டில் ரூ. 3.78 கோடி (சென்ற ஆண்டு ரூ. 2.08 கோடி) பெறப்பட்டுள்ளது.

V. அட்டவணை - உ - நடப்பு பொறுப்புகள் :

1. இதர பொறுப்புகள் – பணியாளர் – பொது வைப்பு நிதி ரூ. 7.60 கோடி (சென்ற ஆண்டு ரூ. 11.19 கோடி)

பொது வைப்பு நிதியிலுள்ள மீதி தொகையானது பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணத்திற்கு பிறகு பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் பங்களிப்பை குறிக்கிறது.

2. இதரபொறுப்புகள் – மற்றவை :

கணக்கு பேரேடு எண்கள் 5390 மற்றும் 5410 இல் இருக்கும் இருப்பு தொகை ரூ. 0.33 கோடி வெகுகாலமாக நிலுவையிலுள்ளது.

VI. அட்டவணை - ஊ - நிலையான சொத்துக்கள் :

1. நிலையான சொத்துக்களில் அடங்கும் ரூ. 81.40 கோடி (சென்ற ஆண்டு ரூ.81.40 கோடி) மதிப்பில் முந்தைய ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட மூன்று திட்டங்கள் முறையே இரண்டாவது சென்னை மாநகர திட்டம், நாள் ஒன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டப் பணிகள் ஆகியவற்றை பொறுத்தவரை திட்ட நிறைவு அறிக்கை இன்னும் பெறப்படவில்லை. நிதியாண்டு 2020–21ல் மேற்கூறிய ஆணையிட்ட திட்டங்களுக்கு நடைமுறை வழக்காக 5 சதவீதம் தேய்மானத்திற்காக ரூ.4.07கோடி(சென்ற ஆண்டு ரூ. 4.07கோடி) ஒதுக்கப்பட்டுள்ளது.

2. செயல்பாட்டில் உள்ள திட்டங்கள் – கழிவுநீரகற்றுதல் – சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மதுரை மற்றும் கும்பகோணம் கழிவு நீரகற்றுப் பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூ. 168.63 கோடி (சென்ற ஆண்டு ரூ. 168.63 கோடி) கழிவுநீரகற்று வைப்பு பணிகளில் சேர்கிறது. (மதுரை ரூ. 115.73 கோடி (சென்ற ஆண்டு ரூ. 115.73 கோடி) மற்றும் கும்பகோணம் ரூ. 52.90 கோடி (சென்ற ஆண்டு ரூ. 52.90 கோடி)) இந்த தொகை மதுரை ரூ. 117.58 கோடி (சென்ற ஆண்டு ரூ. 117.58 கோடி) மற்றும் கும்பகோணம் ரூ. 52.56கோடி (சென்ற ஆண்டு ரூ. 52.56 கோடி) வைப்பு நிதியிலிருந்து பெறப்பட்டது. பெரும்பாலான வேலைகளுக்கான நிறைவு அறிக்கை பெறப்பட்டிருந்தாலும் சில வேலைகளுக்கான நிறைவு அறிக்கை நிலுவையில் உள்ளதால் இவை செயல்பாட்டில் உள்ள திட்டங்களாக கருதப்பட்டுள்ளது.

3. வைப்புப் பணிகளுக்குப் பெறப்பட்ட தொகையின் பற்றாக்குறையைப் பொறுத்தவரை, வாரிய நிதியிலிருந்து பயன்படுத்தப்படுகிறது, ஆனால் வட்டி விதிக்கப்படுவதில்லை. இதேபோல், அதிக வைப்புத்தொகை பெறப்பட்டால், வாரியம் பின்பற்றும் நிலையான நடைமுறையின்படி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வாரியத்திலிருந்து வட்டி வழங்கப்படுவதில்லை.

4. சம்பளம், ஊதியம், மற்றும் ஊதியபடிகள், அலுவலக செலவினங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் மசகு எண்ணெயின் செலவுகள் செயல்பாட்டில் உள்ள பணிகளுக்காக ஒதுக்கீடு விகிதங்கள் முறையே 23% மற்றும் 30% ஆகும்.

5. சில முன்னாள் உள்ளாட்சி அமைப்புககளைப் பொறுத்தவரை, அவற்றால் உபயோகப்படுத்தப்பட்ட சில சொத்துக்கள் அவற்றிற்கு உரிமை இல்லாதவையாகும். எனினும் அச்சொத்துக்கள் உள்ளாட்சி அமைப்பின் வசம் உள்ளன. இந்த சொத்துகளை பண இழப்பீட்டுடன் கூடிய உரிமை மாற்றம் செய்வதா அல்லது தற்போதைய நடைமுறையிலே தொடர்வதா என்பதை குறித்து முடிவு எடுக்கப்படவில்லை.

6. 2020–21 வரையிலான, வறட்சி நிவாரண பணிகளுக்கான தொகை ரூ.163.75 கோடி (2019–20 வரை ரூ. 160.51 கோடி) நிலையான சொத்துக்களில் உள்ளடங்கும். இவ்வாறான சொத்துகளுக்கு தேய்மானம் ஏதும் கருத்தில் கொள்ளப்படவில்லை. 2010–11 ஆம் ஆண்டில் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இச்சொத்துக்கள், அதனுடைய உபயோகத்தன்மையை தற்போது இழந்திருக்கும். ஆகவே அவற்றை தக்க அதிகார அமைப்பின் அனுமதியோடு தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7. குடிநீர், கழிவுநீர் மற்றும் பொது வகைபாடுகளின் கீழ், முந்தைய ஆண்டுகளில் செயல்பாட்டிற்கு வந்த மொத்த தொகை ரூ. 8.28 கோடி (சென்ற ஆண்டு ரூ. 77.33 கோடி) மதிப்பிலான அசையா சொத்துகள் முடிவுற்ற சான்று பெறப்பட்டு, நடப்பாண்டில் மூலதனக் கணக்கில் கொண்டுவரப்பட்டுள்ளன. இவற்றின் மீது ரூ.0.50 கோடி (சென்ற ஆண்டு ரூ. 1.49 கோடி) தேய்மானம் கணக்கிடப்பட்டு முந்தைய கால சரிகட்டும் கணக்கில் கணக்கிடப்பட்டுள்ளது.

8. முந்தைய ஆண்டான 2019–20ல் சொத்து தொகுதியின் தொடக்க இருப்பில் இருந்த வித்தியாச தொகை ரூ.4.35 கோடி ஒத்திசைவு செய்து சரி செய்யப்பட்டது.

## VII. அட்டவணை – எ – நடப்புச் சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத்தொகை :

1. சரக்குகள் – ரூ 7.72 கோடி – (சென்ற ஆண்டு – ரூ. 4.32 கோடி)

அ) முந்தைய ஆண்டின் கணக்குப் புத்தகங்களில் கடன் இருப்பைக் காட்டிய போக்குவரத்தில் உள்ள சரக்குகளின் மதிப்பு தற்பொது சரி செய்யப்பட்டுள்ளது.

ஆ) 31 மார்ச் 2021 வரையிலான சரக்குகளின் வயது பகுப்பாய்வு கிடைக்கவில்லை. அசையாத அல்லது காலாவதியான சரக்குகள் கண்டறியப்பட்டு அவற்றை மாற்றுவதற்கு அல்லது ஏலத்தில் விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இ) பின் வரும் இரண்டு கணக்குகளின் இருப்புகளும் சரக்குகள் கணக்கின் இருப்பில் உள்ளடங்கி உள்ளன. இந்த இரு கணக்குகளின் ஒத்திசைவு செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது.

பண்டகசாலையின் பற்றாக்குறை (பேரேடு எண்–8240)–ரூ.1.93 கோடி (சென்ற ஆண்டு ரூ. 1.93 கோடி) பற்று இருப்பு
பண்டகசாலையின் உபரி (பேரேடு எண்–8230) – ரூ. 1.93 கோடி (சென்ற ஆண்டு ரூ. 1.93 கோடி) வரவு இருப்பு

ஈ) பண்டகசாலையின் தனிக்கணக்கில் சரக்குகளின் மதிப்பு ரூ 5 லட்சம் உள்ளடக்கியதாகும் (பிராந்திய அலுவலகம்–II ரூ. 3.46 லட்சம் (சென்ற ஆண்டு ரூ. 3.46 லட்சம்) மற்றும் தலைமை அலுவலகம் ரூ. 1.54 லட்சம் (சென்ற ஆண்டு ரூ. 1.54 லட்சம்) ஆகியவை

உ) பொது பேரேட்டு கணக்கு எண்களில் உள்ள பண்டகசாலை கணக்கு குறியீட்டு எண்கள் 8200 முதல் 8225 வரை இருப்பு தொகையும், சரக்கு இருப்பு சான்றிதழிலுள்ள இருப்பு தொகையும் ஒத்துப் போகவில்லை. இக்கணக்குகளை ஒத்திசைவு செய்யும் முறை நடப்பில் உள்ளது.

ஊ) சரக்கு மற்றும் அதனுடன் நிலுவையில் உள்ள இருப்புத் தொகை சரிக்கட்டுதல் கணக்குகளாகிய பண்டகசாலை கட்டுப்பாட்டுக் கணக்கு, பண்டக சாலை சரிக்கட்டுதல், உள்ளே வரும் சரக்கு மதிப்பீடு, சரக்கு வள ஆதாரங்கள் ஆகியவைகள் ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

2. சில்லறைக் கடனாளிகள் – ரூ.525.79 கோடி (சென்ற ஆண்டு – ரூ.365.04 கோடி):

அ) வாரியம் பின்பற்றும் கொள்கையின்படி 2021 மார்ச் 31 அன்று நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரி ஆகிய தலைப்பின் கீழ் பல்வேறு கடனாளிகளுக்கு ஐயப்பாடுள்ள கடன்களுக்கான ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

ஆ) நடைமுறையிலுள்ள கொள்கையின்படி, கழிவுநீரகற்று சேவைக் கட்டணங்களுக்கான பல்வேறு கடனாளிகள் ஐயப்பாடுள்ள கடன்களுக்கு ஒதுக்கீடு பரிசீலிக்கப்படவில்லை.

இ) சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் குழுமப் பணிக்கொடை அறக்கட்டளையின் கணக்கின் கீழ் வரும் ரூ. 1.20 கோடி (சென்ற ஆண்டு – ரூ.1.20 கோடி) சில்லறை கடனாளிகள் அடங்கும்.

3. தலைமை அலுவலகம் / பகுதி அலுவலக பரிவர்த்தனை – ரூ. 172.78 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 168.15 கோடி):

தலைமை அலுவலகம் / பகுதி அலுவலக பரிவர்த்தனை கணக்கில் இருக்கும் மீதமுள்ள நிலுவைத்தொகை ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

4. வசூல் கட்டுப்பாட்டு கணக்கு ரூ. 10.18 கோடி (சென்ற ஆண்டு– ரூ. 18.26 கோடி):

வசூல் கட்டுப்பாட்டு கணிக்கில் உள்ள மீதமுள்ள நிலுவை தொகை ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

5. வங்கிகளில் உள்ள குறுகிய கால வைப்புத் தொகை ரூ. 601.78 கோடி (சென்ற ஆண்டு– ரூ. 527.01 கோடி):

31 மார்ச் 2021 தேதி வரையில் வங்கி கணக்குகளில் உள்ள குறுகிய கால வைப்புத் தொகையின் விவரங்கள் ஒத்திசைவு செய்யப்பட்டு வருகிறது.

6. கடன்கள் மற்றும் முன்பணங்கள் ரூ.123.24 கோடி (சென்ற ஆண்டு– ரூ. 34.04 கோடி) கடன்கள் மற்றும் முன்பணங்கள் – செலவுகள் – ரூ.5.38 கோடி (சென்ற ஆண்டு ரூ. 5.36 கோடி):

மேலே குறிப்பிட்டவை, ரூ.3.50 கோடி (சென்ற ஆண்டு – இல்லை ) இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் உள்ள நகராட்சி நிருவாக கட்டிடத்திற்கான வாடகை முன்பணம் மற்றும் தென்னக ரயில்வேக்கு முன் பணமாக கொடுக்கப்பட்டு பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் உள்ள ரூ. 0.67 கோடி ஆகியவை உள்ளடக்கியதாகும்.

7. வைப்புத்தொகைகள் மற்றும் முதலீடுகள் – ரூ. 436.14 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 451.77 கோடி):

வைப்புத் தொகை மற்றும் முதலீடுகள் – பணியாளர்கள் / மற்றவை

ஓய்வூதிய நிதி முதலீடுகள், தொலைதொடர்பு துறையில் வைப்புத்தொகை, மின்சார வாரியம் மற்றும் நிலையான வைப்புத்தொகையின் மீதான வட்டி போன்ற வடிவங்களில் உள்ள முதலீடுகளைப் பொறுத்தவரை, பொதுப்பேரேட்டின்படி நிலுவையில் உள்ள தொகை சரிபார்ப்பில் உள்ளது.

## வரவு மற்றும் செலவு கணக்கிற்கான குறிப்புகள் :

VIII. அட்டவணை – ஏ - குடிநீர் விற்பனை மற்றும் கழிவு நீரகற்று கட்டணம் :

1. குடிநீர் விற்பனை – அளவுமானி பொருத்தப்படாதது – வீட்டு உபயோகம் – ரூ. 68.81 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 67.08 கோடி):

இந்த தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள தொகை, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் இணைக்கப்பட்ட மற்றும் முக்கிய பகுதிகளில் வீட்டு உபயோக நுகர்வோருக்கான அளவி பொருத்தப்படாத கட்டணங்கள் தொடர்பானது. 2020–21ம் நிதியாண்டில் அதிகரித்த வீட்டு உபயோக நுகர்வோரின் எண்ணிக்கை காரணமாக இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது.

2. மானியங்கள் மற்றும் உதவித் தொகை – ரூ. 224.32 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 274.19 கோடி):

மீஞ்சூர் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கியதற்கு அரசிடமிருந்து பெற்ற மானியத் தொகை ரூ. 175.00கோடி (சென்ற ஆண்டு – ரூ. 87.50 கோடி), சேரி குடியிருப்புகள் மற்றும் புற்றுநோய் மருத்துவ நிறுவனத்திற்கு ரூ. 36.11 கோடி (சென்ற ஆண்டு – ரூ.36.18 கோடி), முந்தைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் பெறப்பட்ட கடன்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதி ஆகிய நிறுவனங்களுக்கு வட்டி தொகையை திருப்பி செலுத்துவதற்காகவும் ரூ. 1.67 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 2.32 கோடி), மற்றும் வறட்சிப் பணிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 11.54 கோடி (சென்ற ஆண்டு – ரூ.148.19 கோடி) மேற்கண்டவற்றில் உள்ளடங்கிய தொகையாகும்.

IX. அட்டவணை – ஐ – குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி :

குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி– ரூ. 232.17 கோடி (சென்ற ஆண்டு ரூ. 213.65 கோடி) :

பெருநகர சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு மதிப்பின் சதவீதத்தின் அடிப்படையில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி கணக்கிடப்படுகிறது.

X. அட்டவணை – ஒ – இதர வருமானம் :

1) வங்கியிலிருந்து பெறப்பட்ட வட்டி ரூ.51.21 கோடி (சென்ற ஆண்டு ரூ. 71.29 கோடி) :

வட்டி வருமானம் என்பது வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் உள்ள வைப்புத்தொகை, சேமிப்பு வங்கிக் கணக்கு மற்றும் குறுகிய கால வைப்புத்தொகை ஆகியவற்றின் மீதான திரட்டப்பட்ட வட்டி ஆகும்.

2) தள்ளுபடி பெற்றது – ரூ. 1.76 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 1.53 கோடி) :

மேற்கூறிய தொகையானது, ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு முன்னர் M/s சென்னை வாட்டர் டிசலைனேஷன் லிமிடெட் நிறுவனத் திற்குச் செலுத்தப்பட்ட கட்டணத்தில் கிடைக்கும் தள்ளுபடியைக் குறிக்கிறது.

3) கழிப்பொருள் விற்பனை – ரூ. 0.14 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 0.19 கோடி) :

மேற்கண்ட தொகையானது, மார்ச் 31–2021 இல் முடிவடையும் ஆண்டில் கழிப்பொருட் களின் விற்பனையின் மூலம் வாரியத்தால் பெறப்பட்ட தொகையைக் குறிக்கிறது.

XI. அட்டவணை – ஓ – பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள் :

1. ஓய்வூதியம்

ஓய்வூதிய நிதியின் சேர்திரள் இருப்பு (பேரேட்டு எண் – 5790) ரூ. 92.54 கோடி (சென்ற ஆண்டு – ரூ.92.54கோடி). (பேரேட்டு எண் – 8010) ரூ. 102.09 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 123.24 கோடி) முதலீடு செய்யப்பட்டுள்ளது, மேலும் (பேரேட்டு எண் – 8011) ரூ. 74.20 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 57.72 கோடி) பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ளது. பொறுப்பை உறுதிசெய்த பிறகு ஓய்வூதியத்திற்கான உண்மையான மதிப்பீடு கணக்கில் கொண்டு வரப்படும்.

2, <u>ஓய்வூதிய பலன்கள்</u>

அ) பணிக்கொடை, தொகுப்பூதியம் மற்றும் ஈட்டிய விடுப்பை பணமாக்குதல் போன்ற ஓய்வூதிய பலன்கள் பண அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

ஆ) பொறுப்பை உறுதிசெய்த பிறகு ஓய்வூதியத்திற்கான உண்மையான மதிப்பீடு கணக்கில் கொண்டு வரப்படும்.

XII. <u>அட்டவணை – ஔ – கடன் சேவைக் கட்டணம் – நிதி நிறுவனங்கள்</u>

நடப்பு ஆண்டில் நிதி நிறுவனங்களின் கடனுக்கான வட்டி ரூ. 20.89 கோடி (சென்ற ஆண்டு – ரூ.21.19 கோடி) இதில் ரூ.13.63 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 13.47 கோடி) மூலதனமாக்கப்பட்டுள்ளது.

XIII. <u>இதர குறிப்புகள் :</u>

1, <u>வரி ஒத்திவைப்புகள்</u> தொடர்ந்து ஏற்படும் இழப்புகளை கருத்தில் கொண்டு, வரிகுறைப்பாடுகள் எதிர் காலத்தில் ஏற்படாது என்பதால் ஒத்திவைக்கப்பட்ட வரிகள் மீது ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

2, <u>நிச்சயமற்ற பொறுப்புகள்</u> – வாரியத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 776 வழக்குகள் (உச்ச நீதிமன்றம் – 2. உயர் நீதிமன்றம் – 551, தேசிய பசுமை தீர்ப்பாயம்– 23, துணை நீதிமன்றம் – 176 மற்றும் மதுரை நீதிமன்றம் – 1) நிலுவையில் உள்ளன.

3. மூன்றாம் நபர் நிலுவைகள் ஒத்திசைவு மற்றும் உறுதி படுத்துதலுக்கு உட்பட்டவை.

4, சென்ற ஆண்டின் புள்ளிவிவரங்கள், நடப்பு ஆண்டு வகைப்பாட்டிற்கு இணங்க தேவையான இடங்களில் மறு தொகுப்பு செய்யப்பட்டுள்ளன.

இதே தேதியிட்ட எங்கள் அறிக்கையின் படி
கணேசன் மற்றும் குழுமத்திற்க்காக
பட்டய கணக்காளர்கள்
நிறுவன பதிவு எண்: 000859S

சென்னை குடிநீர் வாரியத்திற்காக

–ஒப்பம் –
**என். சித்ரா**
நிதி இயக்குனர்

–ஒப்பம் –
**ஆர். கிர்லோஷ்குமார், இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குனர்

–ஒப்பம் –
**என்.வெங்கட்ரமணி**
பங்காளர்
உ. எண்: 215145

இடம்: சென்னை
தேதி: 23.02.23

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (சென்னைக் குடிநீர்) துறை

**சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பணிகள் குறித்த 2021 மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் மதிப்பாய்வு**

### அ. நிதி (ஆதாரம்) செயல்பாடுகள்

1, சென்னைப் பெருநகரப் பகுதியில் வாழும் மக்களுக்கு, அதிகரித்து வரும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதி ஆகியவற்றைத் திட்டமிட்ட மேம்பாடு மற்றும் உரிய வழியில் முறைப்படுத்தவும் , குறிப்பாக போதிய அளவு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்கவும் மற்றும் கழிவுநீரை வெளியேற்றவும், பொதுச்சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பணிகள் அனைத்தையும் கவனிப்பதற்கென்று 1978–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28–1978) கீழ் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டது.

2, 2021 ஆம் மார்ச் 31, அன்று வாரியத்தின் மொத்த சொத்துகள் ரூ.11,391.21 கோடி உள்ளது, இதில் நிகர நிலையான சொத்துகளின் மதிப்பு ரூ.9,056.71 கோடி மற்றும் ரூ.2,334.50 கோடியின் தற்போதைய சொத்துக்கள் பல்வேறு சிறு கடனாளிகள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத்தொகை ஆகியவை உள்ளடங்கும். மேலும் நிலையான சொத்து புதுப்பித்தல் நிதியின் கீழ் வைப்புத்தொகை ரூ. 69.29 கோடி, கோவிட் – 19 பொது முடக்க காலத்தில் வருவாய் வசூல் சரிவு காரணமாக ஊதியம், மின்சாரம் மற்றும் பிற செயல்பாடு மற்றும் பராமரிப்புப்பணிக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

3. வாரியத்தின் மொத்தப் பொறுப்புகள் ரூ.13394.98 கோடி, இதில் பங்களிப்பு ரூ.2,215.11 கோடி, அரசு மானியங்கள் ரூ.6,621.81 கோடி, நீண்ட கால கடன்கள் ரூ.1,919.88 கோடி மற்றும் வைப்புத்தொகைகள் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட கடன்கள் உட்பட நடப்பு கடன்கள் ரூ.2,638.18 கோடி ஆகியவை உள்ளடங்கும்.

பின்வரும் அட்டவனண குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று கட்டணங்கள் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வரி மூலம் வரும் வருமானத்தை காட்டுகிறது:

(ரூ. இலட்சத்தில்)

| | 2020 –21 | 2019 –20 |
|---|---|---|
| **அ. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று கட்டணங்கள்** | | |
| **அளவு மானி பொருத்தப்பட்டவை** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 2,398.13 | 1,953.00 |
| வணிகத்திற்கு | 15,048.67 | 13,458.43 |
| வணிக நிறுவனங்களுக்கு | 2,021.75 | 661.66 |
| நகராட்சிகளுக்கு | 540.00 | 305.14 |
| **அளவு மானி பொருத்தப்படாதவை** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 6,881.45 | 6,708.31 |
| வணிகத்திற்கு | 3,920.32 | 3,863.87 |
| வணிக நிறுவனங்களுக்கு | 48.08 | 46.84 |
| ஊர்திகள் மூலம் குடிநீர் வழங்குதல் | 4,356.70 | 7041.04 |
| கழிவுநீரகற்றுதல் கட்டணம் | 11,241.26 | 7,466.85 |
| சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் விற்பனை | 1,675.38 | 2527.59 |
| மொத்தம் (அ) | **48,131.73** | **45,032.73** |
| **ஆ. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வரி** | | |
| குடிநீர் வரி | 4,985.88 | 4,578.78 |
| கழிவுநீரகற்று வரி | 1,8231.11 | 1,67,86.19 |
| **மொத்தம் (ஆ)** | **23,216.99** | **21,364.97** |
| **ஆக மொத்தம்(அ + ஆ)** | **71,348.72** | **66,397.70** |
| இ. இதர வருமானம் | 7,951.15 | 12,384.01 |
| ஈ. திரும்பப் பெறப்பட்ட ஒதுக்கீடு | 89.79 | 1,574.46 |
| உ. மானியங்கள் | 22,431.80 | 27,418.75 |
| ஊ. முந்தைய கால சரிகட்டல் | 9,373.24 | 0.00 |
| **மொத்தம் வருமானம்(அ + ஆ + இ + ஈ + உ + ஊ)** | 1,11,194.69 | 1,07,774.92 |
| **எ. செலவினம்** | 1,22,351.03 | 1,33,309.77 |
| ஏ. முந்தைய கால சரிகட்டல் | 0.00 | 7,505.00 |
| ஐ. ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் ஒதுக்கீடு | 1,446.75 | 400.74 |
| **மொத்தம் செலவினம் (எ + ஏ + ஐ)** | 1,23,797.78 | 1,41,215.51 |
| **ஒ. பற்றாக்குறை** | 12,603.09 | 33,440.59 |

பற்றாக்குறை ரூ.334.41 கோடியில் இருந்து ரூ.126.03 கோடியாகக் குறைக்கப்பட்டதற்கு முந்தைய ஆண்டு மானியம் (ரூ.175 கோடி) நடப்பு ஆண்டில் பதிவு செய்யப்பட்டதும். மேலும், கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக பணியாளர்களின் செலவினம் குறைக்க ஓய்வு பெறுதல் மற்றும் ஈட்டிய விடுப்பைப் பணமாக்குதல் ஆகியவற்றின் நிறுத்தி வைத்ததன் விளைவாக உள்ளது.

4. 2020-21 ஆம் ஆண்டில் மொத்த வருமானம் ரூ.1,111.95 கோடி, செலவு ரூ.1,237.98 கோடி இருந்தது, இதன் விளைவாக ரூ.126.03 கோடி நிகரப் பற்றாக்குறை ஏற்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டில் (2019-20) ரூ.334.41 கோடி பற்றாக்குறை இருந்தது. மேலும் மொத்த வருவாய் வருமானம் மொத்த செலவை விட குறைவாக இருந்தாலும், வாரியம் பயனுள்ள மற்றும் திறமையான சேவைகளை வழங்கி வருகிறது, அதன் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைய தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

5, ஒவ்வொரு ஆண்டும் வாரியம் குடிநீர் வழங்கல் மற்றும் பிற தொடர்புடைய பணிகளை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. எனவே, வட்டித் தொகையின் ஒரு பகுதி ஆண்டுக்கான மொத்த வட்டியிலிருந்து கழிக்கப்பட்டு, அதுவே மூலதன வட்டியாக திட்டச் செலவில் சேர்க்கப்படும். ஆண்டில் மொத்த வட்டியான ரூ.97.28 கோடியில் இருந்து ரூ.13.63 கோடி கழிக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்டது. வட்டியின் மூலதனமாக்கலுக்குப் பிறகு, 2020-21 ஆம் ஆண்டிற்கான வரவு மற்றும் செலவுக் கணக்கின் கீழ் ரூ.83.65 கோடி வட்டியாகக் காட்டப்பட்டுள்ளது.

6, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் அமைப்பு திறன் மேம்பாட்டிற்காக மற்றும் வளர்ச்சிக்காக, வாரியம் இரண்டு கடல்நீரை குடிநீராக்கும் ஆலைகளை செயல்படுத்தியுள்ளது, ஒன்று மீஞ்சூரில் உள்ள கடல்நீரை குடிநீராக்கி இயக்கி திரும்ப ஒப்படைக்கும் அடிப்படையில் மற்றொன்று ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசின் நிதியுதவி தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு திட்டம் -III, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை திட்டம் ஆகியவற்றின் நிதியுதவியின் கீழ் நெம்மேலியில் அமைந்துள்ள கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்.

## ஆ. செயல்முறை

### 1.1 கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர் கொண்டு செல்ல குழாய் பதிக்கும் பணி

தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா கால்வாய் வரை 17 கி.மீ நீளத்திற்கு 900 மி.மீ விட்டமுள்ள பிரதான விசை குடிநீர் குழாய் பதிக்க ரூ.93.97 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவுற்றன.

### 1.2 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டப் பணிகள் (CMCDM)

சென்னை மாநகரின் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த தொடங்கப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழ்வருமாறு:-

## சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல் திட்டங்கள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| | **2011-12 குடிநீர் திட்ட பணிகள்** | | |
| 1. | குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதித்தல் | 23.56 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 2. | புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல் | 12.23 | |
| 3. | அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல் | 20.71 | |
| | **2012-13 குடிநீர் வழங்கல் திட்டம்** | | |
| 4. | நொளம்பூர் | 18.00 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 5. | காரம்பாக்கம் | 20.56 | |
| 6. | நந்தம்பாக்கம் | 6.00 | |
| 7. | ஈஞ்சம்பாக்கம் | 22.30 | |
| 8. | சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம் | 35.70 | |
| | **2013-14 குடிநீர் வழங்கல் திட்டம்** | | |
| 9. | பள்ளிக்கரணை | 61.88 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 10. | முகலிவாக்கம் | 34.39 | |
| 11. | கொட்டிவாக்கம் | 23.00 | |
| 12. | பெருங்குடி | 45.00 | |
| 13. | பாலவாக்கம் | 30.00 | |
| 14. | வடபெரும்பாக்கம் மற்றும் தீயம்பாக்கம் | 20.00 | |
| | **மொத்தம்** | **373.33** | |

## 1.3 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்கியது, மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக வழங்கியது, இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு :–

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | சென்னை மாநகரின் குடிநீர் விநியோக அமைப்பில் மேம்பாட்டுப் பணிகள் | 322.00 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| | குடிநீர் வழங்கல் திட்டம் | | |
| 2. | மதுரவாயல் | 23.30 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 3. | திருவொற்றியூர் | 85.11 | |
| 4. | அம்பத்தூர் | 267.08 | |
| 5. | ஆலந்துூர் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள் | 64.39 | |
| 6. | உள்ளகரம்-புழுதிவாக்கம் | 24.24 | |
| | மொத்தம் | 786.12 | |
| **இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்பு நிதிப் பணிகள்** | | | |
| 1. | ஆவடி | 103.84 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| | மொத்தம் | 103.84 | |

## 1.4 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்- III (TNUDP-III)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | பம்மல் | 43.10 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 2. | பல்லாவரம் | 99.95 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| | மொத்தம் | 143.05 | |

## 1.5 கழிவு நீரகற்று சேவைகள்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் கழிவு நீர் சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரினை மீண்டும் பயன்படுத்துதல், மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து மின் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட கழிவு நீரகற்றல் வசதிகளை வழங்கி வருகிறது. சென்னையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 912.80 மில்லியன் லிட்டர் ஆகும்.

குடியிருப்புகளிலிருந்தும் மற்றும் பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் 4,149 கி.மீட்டர் நீளம் கொண்ட கழிவுநீர் அமைப்பின் மூலம் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுநீர் 322 கழிவுநீரேற்றும் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. சென்னை மாநகரின் கழிவுநீர் அமைப்பு 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் தனித் தனியான சேகரித்தல், அனுப்புதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் வசதிகளைக் கொண்டுள்ளது. கழிவுநீரேற்று நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுநீர் 16 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

### கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன்

| கழிவுநீர் மண்டலம் | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | சுத்திகரிப்பு திறன் (MLD) |
|---|---|---|
| I & II | கொடுங்கையூர் (80+80+110+120) | 390 |
| | திருவொற்றியூர் | 31 |
| III | கோயம்பேடு (34+60+120) | 214 |
| IV | நெசப்பாக்கம் (54+40+23) | 117 |
| | நெசப்பாக்கம் TTUF | 10 |
| V | பெருங்குடி (60+54+12) | 126 |
| | சோழிங்கநல்லூர் – I | 18 |
| | **நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்** | |
| | சேத்துப்பட்டு | 1 |
| | சூளைமேடு | 1.2 |
| | தாடண்டர் நகர் | 4 |
| | கோட்டூர்புரம் | 0.6 |
| | மொத்தம் | **912.80** |

வாரியம் தொடங்கப்பட்ட 1978 ஆம் ஆண்டிலிருந்து வாரியத்தின் கழிவுநீரகற்றும் சேவைகள் பன்மடங்காக வளர்ச்சி அடைந்துள்ளது.

### கழிவுநீரகற்றும் சேவையில் முன்னேற்றங்கள்

| வ. எண் | விவரங்கள் | 1978 ஆம் ஆண்டில் | 2020 ஆம் ஆண்டில் |
|---|---|---|---|
| 1. | கழிவுநீரகற்று குழாய்களின் நீளம் (கி.மீ) | 1,223 | 4.093 |
| 2. | கழிவுநீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை | 58 | 302 |
| 3. | கழிவுநீர் சுத்திகரிப்பு திறன் (நாளொறுக்கு மில்லியன் லிட்டரில்) | 57 | 776 |
| 4. | நுகர்வோர்களின் எண்ணிக்கை | 1,14,000 | 9,09,000 |

### 1.6 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்ட நிதியின் கீழ் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் (CMCDM)

இந்நிதியின்கீழ் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.2 இணைக்கப்பட்ட பகுதிகளின் பாதாள சாக்கடை திட்டங்களின் நிலவரம்

| இணைக்கப் பட்ட பகுதிகளின் எண்ணிக்கை | பணிகள் முடிவுற்றவை | பணிகள் நடை பெறுபவை | பணி துவங்கப்பட உள்ளவை | ஒப்பந்த நிலையில் உள்ளவை | நிதியுதவி கோரப் பட்டுள்ளவை |
|---|---|---|---|---|---|
| 42 | 17 | 9 | 1 | 6 | 9 |

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட 42 பகுதிகளில், 17 பகுதிகளான வளசரவாக்கம், ஆலந்தூர், மாதவரம், மீனம்பாக்கம், மதுரவாயல், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு மற்றும் நொளம்பூர், போரூர், உள்ளகரம்- புழுதிவாக்கம், கத்திவாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம் திருவொற்றியூர், பெருங்குடி மற்றும் அம்பத்தூர் ஆகியவற்றில்பணிகள் முடிவுற்றுள்ளன.

நெற்குன்றம், பள்ளிக்கரணை, ராமாபுரம், மணலி, சின்னசேக்காடு, மணப்பாக்கம், காரம்பாக்கம், முகலிவாக்கம் மற்றும் மடிப்பாக்கம் ஆகிய 9 பகுதிகளில் ரூ.783.00 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நந்தம்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்ட பணிக்கு ரூ.24.65 கோடி மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஒக்கியம்-துரைப்பாக்கம் பாதாள சாக்கடைத் திட்ட பணிக்கு ரூ.256.91 கோடி மதிப்பீட்டிற்கும் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்போது ஒப்பந்த நிலையில் உள்ளது. மேலும், ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை மற்றும்

உத்தண்டி ஆகிய பகுதிகளுக்கான விரிவான பாதாள சாக்கடைத் திட்ட பணிக்கு ரூ.644.59கோடி மதிப்பீட்டிற்கும், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம் மற்றும் மாதவரத்தில் உள்ள விடுபட்ட தெருக்கள் ஆகிய பகுதிகளுக்கான விரிவான பாதாள சாக்கடைத் திட்ட பணிக்கு ரூ.1,269.63 கோடி மதிப்பீட்டிற்கும், அம்ரூட் 2.0, ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி மற்றும் சிங்கார சென்னை 2.0 ஆகிய திட்டங்களின் கீழ் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பகுதிகளில் ஈஞ்சம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை மற்றும் உத்தண்டி ஆகிய பகுதிகளின் பாதாள சாக்கடைத் திட்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

ஜல்லடம்பேட்டை பகுதிக்கான விரிவான பாதாள சாக்கடைத் திட்ட பணிக்கு, திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கை ரூ.92.76 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்காக, நடவடிக்கையில் உள்ளது.

## சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கழிவு நீரகற்று பணிகள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| | **2011-12** | | |
| 1. | கழிவு நீரேற்று நிலையங் களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல் | 9.26 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 2. | பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை பெரிதாக்குதல் | 20.39 | |
| 3. | முகப்பேரில் பாதாள சாக்கடை அமைப்பின் திறப்பு வாயில்கள் அமைத்தல் மற்றும் நீர்மூழ்கி மின் இயந்திரத்துடன் கூடிய சாலை ஓர கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல் | 14.08 | |
| 4. | தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவுநீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் | 11.24 | |
| 5. | கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்குதல் | 31.18 | |
| 6. | 35 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 50 தூர் வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | 9.90 | இயந்திரங்கள் கொள் முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன |
| 7. | பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல், பெரிதாக்குதல் மற்றும் தொடர்புப் பணிகள் | 36.55 | பணிகள் முடிவுற்றுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| **2012-13 பாதாளச் சாக்கடைத் திட்டம்** | | | |
| 8. | கத்திவாக்கம் | 86.15 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 9. | சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம் | 110.90 | |
| 10. | கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல் | 15.20 | இயந்திரங்கள் கொள் முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன |
| **2013-14 பாதாளச் சாக்கடைத் திட்டம்** | | | |
| 11. | திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்) | 8.51 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 12. | நொளம்பூர் | 26.01 | |
| 13. | சூரப்பட்டு | 35.00 | |
| 14. | புத்தகரம் மற்றும் கதிர்வேடு | 60.00 | |
| | மொத்தம் | 474.37 | |

**1.7 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JnNURM)**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்கியது. மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக வழங்கியது. மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு :-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | தகவல் தொழில் நுட்ப சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைக்கும் பணிகள் | 41.77 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | **பாதாள சாக்கடைத் திட்டம்** | | |
| 2. | உள்ளகரம்-புழுதிவாக்கம் | 28.08 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 3. | அம்பத்தூர் (சிப்பம் 2,3,4 மற்றும் 5) | 130.91 | |
| 4. | மதுரவாயல் | 57.45 | |
| 5. | போரூர் | 38.29 | |
| 6. | பெருங்குடி | 20.72 | |
| | மொத்தம் | **317.22** | |
| **இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்புத் தொகை பணிகள்** | | | |
| 1. | ஆவடி நகராட்சி | 158.05 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 2. | திருமழிசை பேரூராட்சி | 20.47 | |
| | மொத்தம் | **178.52** | |

### 1.8 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-III – (TNUDP–III)

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட 3 பகுதிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | மாதவரம் | 50.22 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 2. | திருவொற்றியூர் | 67.63 | |
| 3. | அம்பத்தூர் பகுதி –I | 65.75 | |
| | மொத்தம் | **183.60** | |

### 1.9 தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டம் (TNIPP)

சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட மேலும் ஒரு கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம்

சோழிங்கநல்லூரில் ரூ.65.97 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஏற்கெனவே நாளொன்றுக்கு 18 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட அலகு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தொடர் உலை தொழில்நுட்பத்தை (SBR Technology) பயன்படுத்தி, சென்னையின் தென் பகுதியில் உள்ள கிழக்கு கடற்கரை சாலையை ஒட்டியுள்ள இணைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் பழைய மகாபலிபுரம் சாலை பகுதிகளில் சேகரமாகும் கழிவுநீரை சுத்திகரிக்கும் நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட அலகு நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நடப்பபாண்டில் செயல்பாட்டிற்கு வரும்.

### 2.0 மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம்

சென்னை பெருநகரம் உபயோகப்படுத்தப்பட்ட நீர் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாட்டில் முன்னோடியாக திகழ்கிறது. அடல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டத்தின் (அம்ரூட் 2.0) வழிகாட்டுதல்களின்படி, 20 சதவீதம் மறுசுழற்சி நீரை பயன்படுத்த வேண்டும். நீர் சேமிப்பின் முயற்சியாக நாளொன்றிற்கு 23 மில்லியன் லிட்டர் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் மணலியிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது, தொழிற்சாலைகளால் மீண்டும் சுத்திகரிக்கப்பட்டு தொழிற்சாலை பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. மேலும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீரினை உற்பத்தி செய்வதற்காக 2 எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான சுத்திகரிப்பு நிலையங்களை (TTRO) அமைத்துள்ளது.

Chennai Metropolitan Water Supply & Sewerage Board

## எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை குடிநீர் வாரியத்தால் கோயம்பேடு மற்றும் கொடுங்கையூரில் நிறுவப்பட்ட நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட இரண்டு எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான (TTRO) மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து தொழிற்சாலை களுக்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தொழிற்சாலை பயன்பாட்டிற்கான நீர் தேவைகளை நிறைவு செய்யப்படுவதுடன், தொழிற்சாலைகளுக்கான நன்னீரின் தேவை குறைகிறது,

## புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் பழைய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புனரமைத்தல் / மேம்படுத்தும் பணிகள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தனது 30.05.2020 ஆம் நாளிட்ட ஐந்தாவது திருத்தப்பட்ட தொகுப்புரையில், ஒன்றிய சட்டங்கள், விதிமுறைகள், அறிவிப்புகள் மற்றும் ஆணைகளின் அடிப்படையில், திருத்திய சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தர அளவுகளை வரையறுத்துள்ளது. இந்த விதிமுறைகள் பின்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ளன. இவை 26.05.2026 முதல் அமலுக்கு வரும்.

| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான தர அளவுகள் | | |
|---|---|---|
| | தர அளவுகள் | மீமிகு மற்றும் பெருநகரங்கள் (சென்னை) |
| 1. | அமில – கார குறியீடு (pH) | 5.5 - 9.0 |
| 2. | உயிர் வேதியியல் ஆக்ஸிஜன் தேவை (BOD) | 10 மி.கி/லி |
| 3. | மொத்த மிதக்கும் திடப் பொருட்கள் (TSS) | 20 மி.கி/லி |
| 4. | வேதியியல் ஆக்ஸிஜன் தேவை (COD) | 50 மி.கி/லி |
| 5. | மொத்த நைட்ரஜன் | 10 மி.கி/லி |
| 6. | மொத்த பாஸ்பரஸ் (குளங்கள், ஏரிகளில் வெளியேற்றுவதற்கான) | 1.0 மி.கி/லி |
| 7. | மல கோலிபார்ம் (FC) – 100 மிமீக்கு தோராயமான எண்ணிக்கை (MPN/100) | விரும்பத்தக்க அளவு -100 ; அனுமதிக்கப்பட்ட அளவு -230 |

சென்னை குடிநீர் வாரியம், கொடுங்கையூர்-1, கொடுங்கையூர்-2, பெருங்குடி மற்றும் நெசப்பாக்கம் ஆகிய இடங்களில் 4 புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் மற்றும் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகளை ரூ.811.40 கோடி திட்ட மதிப்பீட்டில் பின்வரும் அட்டவணையில் உள்ளவாறு மேற்கொண்டுள்ளது.

| புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல் | | செயல்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் | |
|---|---|---|---|
| இடங்கள் | சுத்திகரிப்பு திறன் (MLD) | இடங்கள் | சுத்திகரிப்பு திறன் (MLD) |
| கொடுங்கையூர் மண்டலம்I | 120 | கொடுங்கையூர் | 110 |
| நெசப்பாக்கம் | 50 | கோயம்பேடு(120+60) | 180 |
| பெருங்குடி | 60 | நெசப்பாக்கம்(40+54) | 94 |
| மொத்தம் | 230 | பெருங்குடி (60+54 | 114 |
| | | மொத்தம் | 498 |

120 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கொடுங்கையூர் மண்டலம் II நிலைய பணிகள் முடிவடைந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.11.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது,

**சிவ் தாஸ் மீனா**
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

## ஐந்தாண்டு நிதிநிலைச்சுருக்கம் - ஒரு கண்ணோட்டம்

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2020-21 | 2019-20 | 2018-19 | 2017-18 | 2016-17 |
|---|---|---|---|---|---|
| **அ. வருமானம்** | | | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | 713.48 | 663.97 | 816.77 | 480.64 | 488.30 |
| இதர வருவாய் | 398.46 | 413.77 | 256.55 | 407.37 | 415.97 |
| மொத்த வருவாய் | **1,111.94** | **1,077.74** | **1,073.32** | **888.01** | **904.27** |
| **ஆ. செலவினம்** | | | | | |
| சம்பளம் மற்றும் ஊதியம் | 250.58 | 263.61 | 289.93 | 199.51 | 201.39 |
| இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 670.50 | 719.56 | 610.08 | 555.09 | 509.69 |
| வட்டி | 83. 65 | 91.38 | 10.43 | 72.76 | 76.80 |
| தேய்மானம் | 130.01 | 139.03 | 138.92 | 139.16 | 154.68 |
| இதர செலவினம் | 103.24 | 198.58 | 112.73 | 86.59 | 81.89 |
| மொத்த வருவாய் செலவினங்கள் | **1,237.98** | **1,412.16** | **1,162.11** | **1,053.12** | **1,024.45** |
| **வரவை விட செலவு அதிகம்(அ–ஆ) (பற்றாக்குறை)** | –126.03 | –334.41 | –88.79 | –165.11 | –120.18 |
| பங்குகள் | 2,215.10 | 2,051.30 | 1,906.06 | 1,792.29 | 1,683.28 |
| அரசு மானியம் | 6,621.80 | 5,666.75 | 4,921.00 | 4,480.03 | 4,082.26 |
| நீண்ட கால கடன்கள் | 1,919.88 | 1,912.99 | 1,909.07 | 1,107.70 | 1,137.61 |
| நிலையான சொத்துக்கள் | 9,056.71 | 8,302.99 | 7,611.98 | 7,054.53 | 6,644.44 |
| தற்போதைய நிகர சொத்துக்கள் | –303.69 | –549.70 | –419.18 | –1129.10 | –1030.72 |
| [illegible] | | | | | |

# சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2020 - 21 ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் சட்டமன்றப் பேரவை முன் வைப்பதில் ஏற்பட்ட காலதாமத்திற்கு உரிய காரணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | (அ) | தமிழ்நாடு அரசு நிதித் துறையின் அறிவுரைப்படி நிறுவனங்கள், கணக்குகளை எந்த கால கட்டத்திற்குள் தொகுக்க வேண்டும் | 30.06.2021 |
| | (ஆ) | கணக்குகள் தொகுக்கப்பட்ட தேதி | 23.02.2023 |
| | (இ) | உரிய கால கட்டத்திற்குள் தொகுக்கப்படாவிட்டால் அதற்கான காரணங்கள் | முந்தைய ஆண்டுகளில் நிலுவையின் காரணமாக 4 2 உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் இணைப்பு மற்றும் பயன்ப்பாட்டிலிருந்த யுனிக் மென்பொருளிலிருந்து ஆரக்கலுக்கு மாறியது, மேலும் கோவிட்– 19 லாக்டவுன் ஆகிய காரணங் களினால் 2020–21 நிதியாண்டிற்கான கணக்கு களை சட்டமன்றத்தில் சமர்ப்பிபதில் தாமதம் ஏற்பட்டது. |
| 2. | (அ) | கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர்கள் எப்பொழுது நியமனம் செய்யப்படவேண்டும் | இந்திய தணிக்கை துறைத் தலைவர் தணிக்கையாளர்களை சிபாரிசு செய்ததும், அதை அரசு அனுமதி கொடுத்தவுடன். |
| | (ஆ) | நியமனம் செய்யப்பட்ட தேதி | 26.06.2020 |
| | (இ) | உரிய காலத்திற்குள் தணிக்கையாளர் நியமனம் செய்யபடாதற்கான காரணங்கள் | பத்தி எண் 1 (இ) ல் குறிப்பிட்டுள்ள காரணங்களால் கணக்குகளை இறுதி செய்வதில் தாமதம் ஏற்பட்ட தால், 2020–21 நிதியாண்டிற்கான தணிக்கை யாளர் நியமனம் தாமதமானது. |
| 3. | (அ) | தணிக்கையாளர்கள் எந்த தேதியில் தணிக்கையை முடிக்க வேண்டும் | 31.10.2021 |
| | (ஆ) | தணிக்கை முடிந்த தேதி | 23.02.2023 |
| | (இ) | உரிய காலத்திற்குள் தணிக்கை முடிக்கப்படாததற்கான காரணங்கள் | பத்தி எண்.1(இ) ல் குறிப்பிட்டுள்ள காரணங் களால் கணக்குகளை இறுதி செய்வதில் தாமதம் மற்றும் பத்தி 2 (இ) ல் கூறப் பட்டுள்ளபடி தணிக்கையாளரை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டதால், கணக்குகளின் தணிக்கையை குறித்த நேரத்தில் முடிக்க இயலவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| 4. | (அ) | மாநில கணக்காயர் / தணிக்கையாளர் கருத்துகள் பெறப்பட வேண்டிய தேதி | பொருந்தாது |
| | (ஆ) | கருத்துகள் பெறப்பட்ட தேதி | பொருந்தாது |
| | (இ) | உரிய காலத்திற்குள் முடிக்காததற்கான காரணங்கள் | பொருந்தாது |
| 5. | (அ) | ஆண்டு கணக்குகள் எந்த தேதிக்குள் வாரியத்தின் பொதுக் குழுக் கூட்டத்தில் வைக்கப்படவேண்டும் | 30.11.2021 |
| | (ஆ) | எந்த தேதியில் வைக்கப்பட்டன | |
| | (இ) | கால தாமதத்திற்கான காரணங்கள் என்ன | பத்தி எண் 1(இ), 2இ) மற்றும் 3(இ) ல் குறிப்பிட்டுள்ள காரணங்களால் கணக்குகளை இறுதி செய்து தணிக்கை செய்வதில் தாமதம் ஏற்படுவதால் குறிப்பிட்ட நேரத்திற்குள் கணக்குகள் தணிக்கை செய்து வாரிய கூட்டத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை. |
| 6. | (அ) | அச்சடிக்கப்பட்ட ஆண்டு அறிக்கைகள் பெறப்பட வேண்டிய தேதி | 31.12.2021 |
| | (ஆ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | பத்தி எண் 1(இ), 2இ), 3(இ) மற்றும் 5(இ) ல் குறிப்பிட்டுள்ள காரணங்களால் கணக்குகளை இறுதி செய்து, தணிக்கை செய்து மற்றும் வாரியக் கூட்டத்தில் சமர்ப்பிக்க தாமதம் ஏற்பட்டதால் ஆண்டு அறிக்கையை அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 7. | (அ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட்ட தேதி | |
| | (ஆ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட்ட தேதி | |
| | (இ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | --- |
| 8. | (அ) | ஆண்டு அறிக்கையை அரசு பெற்ற தேதி | --- |
| | (ஆ) | ஆய்வு செய்ய எடுத்துக் கொண்ட காலம் | --- |
| | (இ) | காலதாமாமிருப்பின் அதற்குரிய காரணங்கள் | --- |
| 9. | (அ) | ஆண்டு அறிக்கை பேரவை முன் வைக்கப்பட வேண்டிய தேதி | 31.03.2022 முன்னால் |
| | (ஆ) | பேரவைச் செயலகத்திருந்து அனுப்பப்பட வேண்டிய தேதி | அடுத்த கூட்டத் தொடருக்கு முன்னால் |

சிவ் தாஸ் மீனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்